www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 1

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 21 ★ ஜனவரி, பிப்ரவரி, 1989 ★


## உள்ளே


★ சென்னையில் தோழர்கள் கீர்த்தி பாலசூரியா, பீட்டவல, குணபால வின் நினைவுக்கூட்டம் பக்கம் 3

★ இலங்கையில் ஐக்கிய முன்னணிக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அழைப்பு பக்கம் 4

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்னோக்கின் தீர்மானங்கள் பக்கங்கள் 5—12


# இலங்கையில் தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்கான புரட்சிகர அழைப்பை ஆதரி!

# ஈழத்தில் இந்திய ராணுவ ஆக்கிரமிப்பைத் தோற்கடிக்கத் தொழிலாளர்களை அணிதிரட்டு!

### சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அறிக்கை

தொழிலாள வர்க்கத்தின் பேரில் பேசும் அனைத்து ஸ்தாபனங்களும் சிறிதேனும் தாமதமின்றி, இலங்கையில் முதலாளித்துவ அரசின் இராணுவ சர்வாதிகார தயாரிப்புகளுக்கும் ஜே. வி. பி. யின் பாசிச குண்டர் தாக்குதல்களுக்கு எதிராகவும் தொழிலாள வர்க்கத்தின் ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த அழைப்பிற்கு ஆதரவு அளிக்கும்படி, இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவுகிறது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அந்த நாட்டிலுள்ள ஐந்து முன்னணி தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்களுக்கு கடிதங்கள் எழுதியுள்ளது; அதில் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளை பேணுவதற்காக தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதற்காக, ஒரு ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விட்டுள்ளது. அது தொழிலாளர்கள் கூட்டத்தில் ஆர்வமான ஆதரவைப் பெற்றது.

டிராட்ஸ்கிசத்தின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் (ICFI) பகுதிகள், இலங்கையில் ஐக்கிய முன்னணிக்கான பிரச்சாரத்திற்கு ஆதரவாக பல நாடுகளில் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளன. இலங்கை டிராட்ஸ்கிஸ்டுகள் விடுத்த இந்த அறை கூவலுக்கு ஆதரவாக தொழிலாள வர்க்கம் அதன் முழு பலத்தையும் அணி




தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க இந்திய ராணுவத்திற்கு மேலும் நவீன ரக ஆயுதங்கள் சோவியத் யூனியன் வழங்குவதை எதிர்த்து அமெரிக்க டிராட்ஸ்கிச ஒர்க்கர்ஸ் லீக்கின் போராட்டம்

திரட்ட அதன் தலைமைகளை நிர்ப்பந்திப்பதற்கான உடனடிப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று சோசலிசத் தொழிலாளர் கழகமும், தொழிலாளர் பாதையும் அதன் வாசகர்களை கேட்கிறது.

இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள், இலங்கையிலுள்ள அவர்களது வர்க்க சகோதரர்கள் ஒரு வாழ்வா சாவா போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அது பற்றி அக்கறை இன்றி இருப்பது ஒரு அபாயகரமான தவருகும். நாம் இந்தியாவிலுள்ள தொழிலாளர்களை எச்சரிக்கிறோம் அதாவது சிறிலங்கா முதலாளித்துவ அரசும், அதன் பாசிச அதிரடி துருப்புகளாக செயற்படும் ஜே.வி.பி.யும், (ஜே. வி. பி. என்பது ஒரு இனவாத பாசிச குட்டி முதலாளித்துவ இயக்கமாகும், அதன் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் 1970 களில் அது "மார்க்சிய" சொற்றொடர்களை உபயோகித்து தன்னை வளர்த்துக்கொண்டது சிறிலங்கா ஆளும் வர்க்கம் மிக மோசமான நெருக்கடிக்குள் செல்லும்போது ஜே வி.பி.யும் தீவிர இனவாத பாசிச இயக்கமாக மாறியது) வெற்றி கொள்ள அனுமதிக்கப்படுவார்களாயின், அதாவது தொழிலாள வர்க்க இயக்கத்தையும் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தையும் நசுக்குவார்களாயின், திட்டவட்டமாக அதனையே இந்திய முதலாளித்துவ வர்க்கமும் அவர்களின் ஏகாதிபத்திய எஜமான்களும் அண்டை நாட்டில் அடைய விரும்புகின்றனர். இந்தியாவிலும் தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களை துடைத்துக்கட்டுவதில் வர்க்க எதிரி ஒரு மிகப்பெரும் படியை

## சோசலிசத் தொழிலாளர் கழக ரூ. 5,000 வளர்ச்சி நிதி

தோழர்களே, நண்பர்களே,

சோசலிசத் தொழிலாளர் கழகம் ரூ 5,000 கட்சி வளர்ச்சி நிதிக்கு திரட்ட ஆரம்பித்துள்ளது. ஸ்டாலினிசம், தேசியவாதம், சந்தர்ப்பவாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றிற்கு எதிராக சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், டிராட்ஸ்கி வழியில் ஒரு கொடியின் கீழ் உலக சோசலிசப் புரட்சி முன்நோக்கின் அடிப்படையில் அணி திரட்ட போராடிவரும் உலகடிராட்ஸ்சிச இயக்கமாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்தியப் பகுதியாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்டி எழுப்ப அனைத்து ஆதரவையும் தருமாறு வாக்க நனவுள்ள தொழிலாளர்களையும் இளைஞர்களையும் கேட்கிறோம்.

## ஈழத்திலிருந்து மாலத்தீவிலிருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்றப் போராடும்படி ஸ்டாலினிச சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி!

படிப்பகம்

www.padippakam.com



தாண்டி முன்னேற வழி வகுக்கும்.

இந்தியத் தொழிலாளர்கள் 1930களில் ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தின் கோரமான அனுபவத்தை நினைவு கூர வேண்டும். அப்பொழுது அந்த தலைவர்கள் ஜெர்மன தொழிலாள வர்க்கத்திற்க புறமுதுகு காட்டினர்; ஹிட்லரின் பாசிசத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்தி அணிதிரட்ட கம்யூனிஸ்ட் மற்றும் சமூக ஜனநாயக தலைவர்கள் மறுத்தனர்.

இந்தக் காட்டிக்கொடுப்பானது டிராட்ஸ்கியின் எச்சரிக்கை இருந்தபொழுதிலும் நடந்தது என்பதை நாம் மறக்காதிருப்போமாக, அதாவது "பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவார்களாயின் அவர்களது டாங்கிகளை தொழிலாள வர்க்கத்தின் மண்டை ஓடுகளுக்கு மேலாக ஓட்டுவார்கள்" என டிராட்ஸ்கி எச்சரித்தார். பாசிசத்தின் வெற்றி இரண்டாம் உலகப் போருக்கான பாதையை திறந்து விட்டதுடன், 1939-45 க்கு இடையில் குறைந்த பட்சம் 10 கோடி தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் உயிர்ப் பலிக்கு காரணமாயிருந்தது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சரி லட்சக்கணக்கான பலம் கொண்ட இலங்கைத் தொழிலாள வர்க்கம் நசுக்கப்பட, கோடிக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பார்களாயின், அது முன்னைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பல கோடி தொழிலாள வர்க்கத்துக்கு எதிரானமிகக்குரூரமான பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட பேராசைகொண்ட இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலாளித்துவ வர்க்கத்துக்கு பச்சைக்கொடி காட்டுவதாக இருக்கும்

லங்கா சமசமாஜக்கட்சி, நவ சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸிற்கு எழுதிய கடிதத்தில், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளரான தோழர் விஜேடயஸ் குறிப்பிட்டதாவது: "ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஆர். பிரேமதாச ஒரு கெட்ட பெயர் பெற்ற தொழிற்சங்க விரோதியாவார். ஜூலை 1980ல் வேலைநிறுத்தத்தில ஈடுபட்ட தொழிலாளர்களை சுடுகாட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று ஜம்பமடிக்கும் அச்சுறுத்தல் கடிதம ஒன்றை வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சரான லலித் அத்துலத் முதலி கூறுவதற்கு ஒரு மந்திரி கருவியாக இருந்திருப்பாராயின் அது பிரதம மந்திரி பிரேமதாசவாகும். அவருடைய முழு விருப்பம் நாட்டுப்புற மக்களிடமிருந்து ஒரு ஆத்திரமூட்டல் எதிரொலியை உபயோகப்படுத்தி, தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களை அழிப்பதன் மூலமாக, தொழிலாள சக்தியை குரூரமாக சுரண்டுவதற்கான நிலைமையை ஏகாதிபத்தியத்திற்கும். உள்ளூர் முதலாளிகளுக்கும் ஏற்படுத்துவதாகும். அவர், முன்னைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களினுல் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தொழிலாள விரோத சட்டங்களையும், விதிமுறைகளையும் பயன்படுத்தி உடனடியாக அவரது பிற்போக்கு தாக்குதலை தொடங்குவார்."

அந்தக் கடிதம், தொழிலாளர்கள் ஒரு புரட்சிகர தலைமை கொடுக்கப்படுமாயின் எப்படி போராடுவார்கள் என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் செயலில் நிரூபித்து காட்டியதை சுட்டிக்காட்டினார்:

"மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலைமையில் உள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்கள் ஜே வி. பி. பாசிஸ்டுகளினுல் தூண்டிவிடப்பட்ட வேலைநிறுத்தம் எனக் கூறப்பட்டதில் பங்கு கொள்ள மறுத்தனர் அந்த நிலைப்பாட்டின் பின்னல் மத்திய வங்கி தொழிலாளர்கள் அணிதிரண்டனர். அவர்களால் அந்தக் கட்டத்தில் பாசிஸ்டுகளின் அத்துமீறலை தூர விலக்கி வைக்கமுடிந்தது அதேபோல் தலைமை வழங்கப்பட்டிருக்குமாயின் ஒவ்வொரு வேலைத் திட்டத்திலும் நிலைமை அதை ஒத்ததாக இருந்திருக்கும்.

இது மிகக் கூர்மையாக கோடிட்டுக் காட்டுவது இலங்கை டிராட்ஸ்கிஸ்டுகள் அறைகூவல் விடுத்த ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான பிரச்சாரத்தின் தீர்க்கமான முக்கியத்துவத்தையாகும்.

சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் புறநிலையான ஐக்கியமானது, முன்னெருபோதும் இல்லாதளவில் உலக முதலாளித்துவ நெருக்கடியுடன் சேர்ந்து வளருகின்றது.

இந்த வளர்ச்சியே, அதன் தன்னிச்சையான வெளிப்பாடை 1980 களில் இலங்கையில் இனப்படுகொலையைத் தொடர்ந்து தொழிலாள வர்க்கத்திற்கும், தமிழ் ஈழ தேசிய இனத்திற்கும ஆதரவாக தமிழ்நாட்டு மக்கள் நடத்திய மிகப்பிரமாண்டமான இயக்கத்தில் காட்டியது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிப் பிரச்சாரத்திற்கு ஆதரவாக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுதொடுத்திருக்கும் பிரச்சார இயக்கமானது நனவுபூர்வமான ரீதியில் தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது.

இலங்கையில் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான முதலாளித்துவ தாக்குதலுக்கு கருவியாக பயன்படும் இந்திய இராணுவத் தலையீட்டுக்கு எதிராக அணி திரட்டுவதன் மூலம் இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் இலங்கையிலுள்ள அவர்களது வர்க்கசகோதரர்களுடன் அவர்களது ஐக்கியத்தை உடனடியாக மீண்டும் உறுதி செய்ய வேண்டும்.

ஜயவர்த்தனே ஆட்சி, தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக போராடவோ அல்லது தொழிலாள வர்க்கத்தை தூர விலக்கி வைக்கவோ திறனற்றதாக உள்ளபோதே 1987-ல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் ஏகாதிபத்தியவாதிகள் இந்திய இராணுவத்தை அந்த நாட்டுக்கு அனுப்பினர், லெனின் ஒரு தடவை சுட்டிக் காட்டியது போல், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டமானது - இங்கே அது தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டமாகும்—பாட்டாளி வர்க்கத்தை அரங்கிற்கு கொண்டு வந்து ஜயவர்த்தனே ஆட்சியை புரட்சிகரமாக தூக்கி வீசும் அச்சுறுத்தலை உண்டு பண்ணியது. அது ஏகாதிபத்திய வாதிகளையும், இத்திய முதலாளித்துவத்தையும் விழிப்படையச் செய்து, இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பும்படியான ஆற்றொணா நடவடிக்கை யெடுக்க நிர்ப்பந்தித்தது. அந்த சமயத்திலேயே 30,000 தொழிலாளர்களை உள்ளடக்கிய, நர்சுகளின் நீடித்த வேலை நிறுத்தமும் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் நடைபெற்றது அது 5,000 போரளர்களை இடது சாரி தொழிற்சங்கங்களின் மாநாட்டிற்கு ஒன்றுக கொண்டு வந்தது. அதுதேசிய விடுதலைப் போராட்டமும், தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப்போராட்டமும் ஒன்றுக வருவது ஏகாதிபத்தியவாதிகளுக்கு கெடுதியாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் கொல்வின் ஆர். டி சில்வாவை சமிக்ஞை செய்ய வைத்தது. இலங்கையில் முதலாளித்துவ அரசின் ஒடுக்கு முறை சக்திகளின்மிகப் பெரும் பகுதியை இந்திய படைகள் வழங்கியது.

மறுபுறம் பாசிச ஜே.வி.பி. இந்திய இராணுவத்தலையீட்டிற்கு சந்தர்ப்பவாத தொழிலாளத் தலைவர்கள் வழங்கும் ஆதரவையும், இந்தியப்படைகள் அங்கிருப்பதையும் சாதகமாக்கி, தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக ஆற்றொணா நிலையிலுள்ள சிங்கள தேசியவாத மத்திய தர வர்க்கத்தை தூண்டி விடுகிறது

பிரமாண்ட முதலாளித்துவ ஆயுதப்படைகளை குவித்துள்ள போதிலும். சிறிலங்கா அரசின் படைகளையும், பாசிச ஜே வி.பி ஐ யும், மற்றும் ஆளும்வர்க்கத்தின் பல்வேறு விதமான முதலாளித்துவ ராணுவமயமாக்கப்பட்ட படைப்பிரிவுகளையும் கொண்டிருந்த போதிலும் 1965-ல் இந்தோனேசியாவைப் போன்ற முறையில் தொழிலாள வர்க்கத்தை நசுக்க முடியாதிருக்கிறது. அதற்குகாரணம் புறநிலையான சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியமாகும், அது அதன் உடனடி வடிவத்தை இலங்கை, இந்திய தொழிலாள வர்க்கத்திற்கு இடையிலான இயல்பான ஐக்கியத்தில் காண்கிறது. 1980 களின் தொடக்க கால இயக்கத்தில் இருந்த இந்த ஐக்கியத்தை ஏகாதிபத்திய வாதிகளும், இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள அதன் அடிவருடிகளும் ஸ்டாலினிச வாதிகளின் திருத்தல் வாதிகளின் உதவியுடன் தற்காலிமாக உடைத்து தமிழ்ஈழ விடுதலைப்போராட்டத்தை தனிமைப்படுத்த முடிந்தது. இந்திய—இலங்கை ஒப்பந்தம், தொழிலாள வர்க்கத்தின் மேல ஒரு கடுமையான தாக்குதலைச் செய்தது.

தமிழ்ஈழ விடுதலைப்போராட்டத்தை, தற்காலிகமாக பின் தள்ள முடிந்திருப்பினும் இந்தியா, இலங்கையில் உள்ள தொழிலாள வர்க்கத்துக்கு இடையிலான இயல்பான ஐக்கியத்தை உடைக்க அவர்களால் ஒரு போதும் முடியவில்லை. இன்றுஎமது பிரச்சார இயக்கத்திற்கு ஆர்வத்துடன் ஆதரவளிக்கும் இந்தியத் தொழிலாளர்களினுல் தெரிவிக்கப்படும் இந்த புறநிலையான ஐக்கியமானது, சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பணிக்கு ஒரு பிரமாண்டமான சக்தியை வழங்குகிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிற்போக்கு அவசரத்தில் அவர்கள் ஒரு சர்வதேச கூட்டு ஒப்பந்தத்தை தேசிய எல்லைகளைக் கடந்த இந்த எதிர்ப்புரட்சி சூழ்ச்சிக்கு ஆதரவாக கையெழுத்திட்டனர். உண்மையில் இலங்கையில் ராஜீவ் காந்தியின் யடவடிக்கை, இந்திய முதலாளித்துவத்தினதும், அவரது ஏகாதிபத்திய எஜமானர்களதும் வளர்ச்சியடைந்த நெருக்கடியையே பிரதிபலிக்கிறது. ஆனுல் பப்லோவாத திருத்தல்வாதிகள் இது இந்திய மேலாதிக்க சக்திக்கான ஆதாரமாகும் என ஜோடிப்பதன் மூலம், சோசலிசப் புரட்சிக்கான பிரமாண்டமான சக்தி ஒடுக்கப்பட்டிருப்பதற்கு துணை புரிகின்றனர்,

இப்படியான எதிர்ப்புரட்சியின் ஏஜெண்டுகளுக்கு எதிராக, இந்தியாவிலுள்ள டிராட்ஸ்கிஸ்டுகளின் இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம், இந்தியாவில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியை கட்டும் நடைமுறையில், தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்தை வெளிப்படுத்தியது. நாம் அதை, 1985 நான்காம் அகிலத்தின அனைத்துலக குழுவை விட்டோடிய ஹீலிவாத தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP) ஒடுகாலிகளின் பிற்போக்குத் தாக்குல்களுக்கு எதிராக பேணினோம்.

இன்று இலங்கையில்புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினல் தொடுக்கப்பட்டிருக்கும்ஐக்கிய முன்னணிக்கான பிரச்சாரமானது அந்நாட்டிலுள்ள தொழிலாள வர்க்கத்தின் எதிர்க்கும் சக்தியின் சுயநிலைப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவில் நடத்தப்படும் சர்வதேசப் பிரச்சார இயக்கத்தின் சாராம்சத்திலேயே இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர்கள் கழகம, இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் தோல்விக்காகவும், அரச இராணுவ ஒடுக்குமுறைக்கும் பாசிச ஜே. வி பி. யின் கேடித்தனத்திற்கு எதிராக சிறிலங்கா தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் ஆதரவாக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டும் போராட்டத்தில், அதன் வரலாற்றிலேயே ஒரு தீர்க்கமான படியை முன்னெடுக்கிறது

இந்திய தொழிலாள வர்க்கத்துக்கு, சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் முன் வைக்கப்பட்ட இரண்டாவது தீர்மானம் இதை பின்வரும் முறையில் தெளிவாக கூறுகிறது: "ஊசலாடிக் கொண்டிருக்கும் கொழும்பு அரசாங்கத்தை காப்பாற்றும் அவர்களது எதிர்ப்புரட்சிகரநடவடிக்கையில் இந்திய அமைதி காக்கும் படைகளென தப்பான பெயர் கொண்ட படையானது அரசாங்கத் தரப்பு புள்ளி விபரங்களின்படியே 2500க்கும் அதிகமான மக்களை தமிழ்ஈழத்தில் கொலை செய்துள்ளது 1987-ல் இந்திய – இலங்கையில் ஒப்பந்தம் கையெழுத்தாகி தமிழ் ஈழத்தில் இந்திய இராணுவம் நிறுவப்பட்டதற்கு காரணம், தமிழ்ஈழ விடுதலைப் போராளிகளால் கொழும்பு அரசாங்கத்தின் இராணுவங்களுக்கு தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட இராணுவத் தோல்விகளின் சாராயசத்தில் கொழும்பு அரசாங்கம் தொழிலாள வர்க்கத்தினுல் புரட்சிகர ரீதியில் தூக்கி வீசப்படுவதிலிருந்து காப்பாற்றுவதற்காகும்".....

"தமிழ்ஈழத்திலும் சிறிலங்காவிலும் இந்திய இராணுவத் தலையீடு நேரடியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் ஊக்குவிக்கப்பட்டது என்பது அமெரிக்க காங்கிரசின் வெளி விவகாரக்குழுவின் தெற்கு ஆசிய துணைக் கமிட்டியின் தலைவரான ஸ்டீவன் சோலார் ஸின் பின்வரும் வார்த்தைகளில் நிரூபிக்கப்பட்டது: "இந்த ஒப்பந்தம் இலங்கையில் உள்ள நிலைமையில் ஒரு பிரமாண்டமான உடைப்பு ஊடுருவலை செய்துள்ளது போல் தோன்றுகிறது. பிரதம மந்திரி காந்தியும், ஜனதிபதி ஜெயவர்த்தனேயும்உள்நாட்டு எதிர்ப்புகளை வெற்றிகாண துணிகர ஆர்வம் காட்டியதை இட்டு நான் மிகவும் கவரப் பட்டிருக்கிறேன். அதனுல் சற்று முன்பு தான்... அடுத்த வருடத்திற்கான நோபல் அமைதிப்பரிசுக்காக அவர்கள் இருவர் பெயரையும் நியமனத்திற்காக அனுப்பியுள்ளேன்."

பப்லோவாத திருத்தல்வாதிகளின், இன்குலாப்கம்யூனிஸ்ட் சங்கதனிற்கு எதிராக வலியுறுத்தியதாவது, இலங்கையில் சோசலிசப் புரட்சிக்கு திரான இந்தியதலையீடு, இந்திய முதலாளித்துவத்தின் பலத்தின் விளைவாகஅல்ல. ஆனுல் உண்மையில்இந்தியமுதலாளித்துவ வர்க்கத்தின் மிக அதிக பலவீனத்திலிருந்து ஊற்றெடுத்த ஒரு ஆற்றொணு செயலாகும்.

இந்தப்பலவீனமானது, ராஜீவ் காந்தி அரசாங்கத்தினுல, உச்சத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 'தளர்த்தல் திட்டங்கள் என வழங்கப்படுபனவற்றின் முழுமையான தோல்வியுடன் இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் நிலைகுலைவில் வெளிபடுத்தபட்டது. அதன்மூலம் உலக வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கை அதிகரிப்பதற்கு பதிலாக மேலும் 0 5% முன்பிருந்ததைவிட குறைந்துளளது. அது உண்மையில் வர்த்தக பற்றுக்குறையையும், பட்ஜெட் பற்றுக்குறையையும் அதிகரித்துள்ளது வெளிநாட்டு ஏகாதிபத்திய மூலதனத்தை கவருவதற்கு மிக கடுமையான ஆவலுள்ள இந்திய முதலாளித்துவம், உடனடியாக தொழிலாளவர்க்கத்தையும் அதன் ஸ்தாபனங்களையும நசுக்க வேண்டிய நிலையிலுள்ளது

வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட பிரமாண்டமான அதிகரிப்பும், ஆலை மூடல்களின் உயர்வும், அதிகரித்துச் செல்லும் மக்கள் எதிர்ப்பும், வளர்ச்சியடைந்து செலலும் வேலை நிறுத்தஅலையின் மூலம்வெளிப்படுத்தப்பட்ட அதிகரித்து செல்லும் தொழிலாள வர்க்கத்தின் கோபமும் காங்கிரஸ் கட்சி முழுமையாக உடைவதும் இப்போது சீரழிவின் உச்சக்கட்டத்தில் உள்ளது. இதனுல் ஏதாவதொரு சாத்தியமான மாற்றீடை ஒன்ருக சேர்ப்பது என்பது முதலாளித்துவ வாக்கத்தினுல முடியாத காரியமாக்கியுள்ளது. இந்தியாவிலுள்ள தொழிலாளர், விவசாயிகளை பெரும்பாலும் 100 வருடங்களுக்கு மேல் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதில காங்கிரஸ வகித்த பங்கை, வி. பி. சிங்கை சூழ உள்ள திவாலகள் வகிப்பதில் ஒருபோதும் வெற்றிகாண மாட்டார்கள்.

தொழிலாள வர்க்கத்தின் சர்வதேசிய மரபுகளைப்பேண போராடி வந்த டிராட்ஸ்கிச வாதிகளின் தலைமையின் கீழ் தொழிலாள வர்க்கம் எடுக்க விருக்கும வரலாற்றுப் பாய்ச்சலை இந்த தடவை பப்லோ வாத நாசகாரர்கள் தடுப்பதில் வெற்றிகாண மாட்டார்கள்.

இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஸ்டாலினிச தலைமைகளும் (இ) காங்கிரஸிற்கும், ஜனதா தளத்திற்கும் வழங்கும் ஒத்துழைப்பை நிறுத்தும்படி நிர்ப்பந்திப்பதன் மூலம் அம்பலப்படுத்தப்படவேண்டும்

† திவாலானமுதலாளித்துவ காங்கிரஸ் அரசாங்கத்தை விரட்டி, அதன் இடத்தில் ஜனதா தளம் என்ற வடிவில மற்றெரு முதலாளித்துவ அரசாங்கத்தை கொண்டு வருவதற்கு ஒரு இடமும் தராது, ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்ய அனைத்து தொழிலாள வர்க்கக் கட்சிகளும், ஸ்தாபனங்களும் நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்.

† இந்தப் போராட்டத்தில் இணைய மறுத்து அவர்களது துரோகத்தை தொடரும் அனைத்து தலைவர்களையும் அம்பலப்படுத்தி, சோசலிசப் புரட்சிப் பாதையில் பலகோடி இந்திய தொழிலாள வர்க்கத்தை வழி நடத்தும் புரட்சித் தலைமையாக, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்ட வர்க்க நன்வுள்ள தொழிலாளர்கள் முன் வர வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# தோழர்கள் கீர்த்தி பாலசூரியா, ஆர். ஏ. பீட்டவல, பி. எச். குணபால ஆகியோரது நினைவுக்கூட்டம்



தோழர் மோசஸ் தலைமையிலான கூட்டத்தில் தோழர் பிரகாஷ் உரையாற்றுகிறார்

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத்தொழிலாளர் கழகம், ஜனவரி 1-ல், சென்னையில் கலைவாணி நர்சரிப் பள்ளியில் (லூட்டேரி) தோழர்கள் கீர்த்தி பாலசூரிய, பீட்டவல, குணபால ஆகியோரின் வாழ்க்கையையும், போராட்டங்களையும் நினைவு கூரும் வகையில் கூட்டமொன்றை நடத்தியது. அக்கூட்டத்தில் தொழிலாளர்களும், இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு தோழர் மோசஸ் ராஜ்குமார் தலைமை தாங்கினார். மற்றும் தோழர்கள் பிரகாஷ், ராம், அருண் குமாரும் உரையாற்றினர். கூட்டத்தின் தொடக்கத்தில் இறந்த புரட்சிகர போராளிகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தோழர் மோசஸ் பேசுகையில், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச்செயலாளராக தோழர் கீர்த்தி பாலசூரியா 20 வருடங்கள் செயலாற்றினார் என்றும் அவர் டிசம்பர் 18, 1987-இல் கட்சிக்காரியாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கையில் திடீர் மாரடைப்பில் இறந்தார் என்றும் குறிப்பிட்டார். "தோழர் கீர்த்தி பாலசூரியா பாட்டாளி வர்க்க சர்வதேசிய வேலைத்திட்டத்திற்காக சமரசமற்ற தீர்க்கமான போராட்டத்தை இனவாதம், தேசியவாதம், சீர்திருத்த வாதம் ஆகியவற்றிற்கு எதிராக நடத்தினார்."

தோழர்கள் பீட்டவல, குணபால் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்தை தமிழ்ஈழ, சிறீலங்கா ஐக்கிய சோசலிச அரசுகள் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் அணி திரட்ட போராடியதன் காரணத்தால் பாசிச ஜே.வி.பி. இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று மோசஸ் கூறினார்.

இந்திய தொழிலாளவர்க்கம் தமிழ்ஈழத்தில் இந்திய ராணுவத்தின் தோல்விக்காகவும், தமிழ்ஈழ, சிறிலங்கா, இந்திய தொழிலாள வர்க்கத்தை புரட்சிகர வேலைத்திட்டத்தில் அணி திரட்டி ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏஜெண்டுகளாக இந்தியா, இலங்கையில் செயலாற்றும் ஆளும் தேசிய முதலாளித்துவ வர்க்கங்களை தோற்கடிக்கவும் போராடுவது அவசியமென்று மோசஸ் வலியுறுத்தினார்.

அடுத்து பேசிய தோழர் பிரகாஷ், இரண்டாம் உலகப் போரின் பின்பு தோன்றிய மிகச்சிறந்த டிராஸ்ட்கிஸ்டுகளில் தோழர் கீர்த்தி பாலசூரியா ஒருவர் என்றுகூறினார். தொழிலாளர் புரட்சிக்கட்சியின் (WRP) ஓடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் பெரும்பான்மையுடன் இணைந்து மீண்டும் அனைத்துலகக்குழுவினுள் டிராட்ஸ்கிசத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தில் தோழர் கீர்த்தி பாலசூரியா தீர்க்கமான பங்கு ஆற்றினார் என்று பிரகாஷ் கூறினார்.

மேலும் "தோழர் கீர்த்தி, 1971-இல் ஜே வி.பி. இயக்கத்தின் வர்க்க நிலைப்பாட்டை ஆய்வு செய்து, மிகத்தீர்க்க தரிசனத்துடன் அதன்வளர்ச்சியைப் பற்றி எச்சரிக்கை செய்தார். இருப்பினும் 1971-ல் அரச ஒடுக்குமுறைக்கு எதிராகவும், கைது செய்யப்பட்ட ஜே. வி. பி. இயக்கத்தினரை விடுதலை செய்வதற்கான பிரச்சாரத்தையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடத்தியது."

"இன்று ஜே.வி.பி. யினரால் படுகொலை செய்யப்பட்ட தோழர் பீட்டவல, 1971-ல் மேற்கூறிய பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவராவர் இன்று ஜே. வி. பி. யினரின் சீரழிந்த நிலைப்பாடு தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு எச்சரிக்கையாகும், அது எவ்வாறு இன்று குட்டி முதலாளித்துவ தீவிரவாதம், வெளிப்படையாக எதிர்ப்புரட்சியின் ஏஜண்டுகளாக செயலாற்றுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஜே.வி.பி. யின் இனவாத பிரச்சாரங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் எதிராக தோழர் பீட்டவல துணிகரமான போராட்டத்தை நடத்தினார். ஜே.வி.பி யினரின் மிரட்டல்களின் மத்தியிலும், தோழர் பீட்டவலவின் மரண நிகழ்ச்சியில், அவர் வாழ்ந்த சிறிய கிராமமான நவகுளவையில் 1000-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இது தோழர் பீட்டவலவின் போராட்டத்திற்கு கிடைத்த மதிப்பையும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பாட்டாளி வர்க்க சர்வதேசிய வேலைத் திட்டத்தின் பக்கம் தொழிலாள, ஒடுக்கப்படும் வர்க்கத்தினர் ஈர்க்கப்படுவதையும் எடுத்துக் காட்டியது."

"அண்மையில் சோவியத் யூனியனில் 'மாஸ்கோ விசாரணைகள்' அம்பலப்படுத்தப்பட்டபோது, லியான் டிராட்ஸ்கியை சோவியத் யூனியனில் முழுமையாக புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்றுகோரும் தீர்மானத்தை தோழர் பீட்டவல, அவரது இலங்கை ஆசிரியர் சங்கத்தில் முன் வைத்தார் இந்தத் தீர்மானம் அவரது தலையீட்டின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது பீட்டவல, அவரது தொழிற்சங்கத்துனுள் தமிழ்ஈழ தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்காகவும் ஜெயவர்த்தனே ராஜீவ்காந்தி அரசாங்கங்களின் கூட்டுச் சதியையும் அம்பலப்படுத்தி போராடினார். ஏகாதிபத்தியத்தால் தீட்டப்பட்ட தெற்கு ஆசியாவின் கேம்ப்டேவிட் ஒப்பந்தமான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அம்பலப்படுத்தியும் அதற்கு எதிராகவும் போராடினார்.



கூட்டத்தின் ஒரு பகுதி

பாசிச "ஜே.வி.பி. யினால் படுகொலை செய்யப்பட்ட மற்றொரு தோழரான குணபால 1970-களில் புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகத்தில் இணைந்தார். அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் மலைநாட்டை சேர்ந்த ஸ்டாப் யூனியனில் உறுப்பினராவார் அவர் புரட்சிக் கொள்கைகளுக்காக பேராதனைப் பல்கலைக்கழக தொழிலாளர்கள், மாணவர்கள் மத்தியில் உறுதியாக போராடினார்" என்றும் பிரகாஷ் கூறினார்.

பப்லோவாததிருத்தல்வாதத்திற்கும் லங்காசமசமாஜக்கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்புக்கு (1964) எதிராகவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியாக ஸ்தாபிக்கப்பட்டது என்று கூறிய தோழர் பிரகாஷ் நான்காம் அகிலத்திலே தோன்றிய பப்லோவாத சீரழிவுகள் இந்தியாவில் போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சி, காங்கிரஸ் சோசலிசக் கட்சியினுள்ளும், இலங்கையில் லங்காசமசமாஜக் கட்சியினுள்ளும் கலைக்கப்பட்டதென்பதை விளக்கினார்

ஏகாதிபத்தியத்தாலும், தேசிய முதலாளித்துவவர்க்கத்தாலும் இந்திய உபகண்டத்தில் உருவாக்கப்பட்ட வகுப்புவாத பிரிவினைகளுக்கு எதிராக அன்று போராடிய ஒரே ஒரு இயக்கம் நான்காம் அகிலத்தின் இந்தியப் பகுதியாக செயற்பட்ட போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சியாகும்." வகுப்புவாத ரீதியில், இந்திய உபகண்ட தொழிலாளவர்க்கத்தை ஏகாதிபத்தியமும் தேசிய முதலாளித்துவ வர்க்கமுமாகச் சேர்ந்து இரத்தவெள்ளத்தில் மூழ்கடித்து பிளவுபடுத்தினர். இதன்மூலம்தொழிலாள வர்க்கத்தின் ஒன்றிணைந்த பிரமாண்டமான சக்தியை பலவீனப்படுத்தி ஏகாதிபத்தியமும், தேசிய முதலாளித்துவமும் தமக்கு ஏற்பட்ட தொழிலாள வர்க்க அபாயத்திலிருந்து, தப்பித்துக் கொண்டனர்."

இதற்கு எதிர்ப்புரட்சி ஸ்டாலினிஸ்டுகள் உறுதுணையாக இருந்தனர்: ஸ்டாலினின் வழிகாட்டலின் கீழ் அன்றைய ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவினையை ஏற்றுக்கொண்டு தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்த உதவி புரிந்தனர்."

இந்திய முதலாளித்துவ வர்க்கப் ஏகாதிபத்தியத்தின் பிரதான போலீஸ்காரராக இந்திய உபகண்டத்தில் பணி புரிவது எதிர்ப்புரட்சிகர இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக மேலும் அம்பலமானது. இவை பற்றி தொழிலாளவர்க்க மத்தியில் எச்சரிக்கை செய்து இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராகவும். தமிழ்ஈழ தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை பேணவும், தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தின் தோல்விக்காகவும் போராடி வருவது சோசலிசத் தொழிலாளர் கழகம் மட்டுமே என பிரகாஷ் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய தோழர் ராம், இந்த நினைவுக் கூட்டம் வெறும்சம்பிரதாய அடிப்படையில் கூட்டப்படவில்லை பதிலாக தோழர்கள் கீர்த்தி பாலசூரியா பீட்டவல, குணபால ஆகியோரின் புரட்சிகரப் போராட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், அவர்களின் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்குமாகும் எனக் கூறினார்.

"இலங்கை டிராட்ஸ்கிச புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தமிழ் ஈழத்திலிருந்த இந்திய ராணுவமும் சிறிலங்கா ராணுவமும் வெளியேற்றப்படவேண்டுமென்று போராடுகிறது. ஆனால் பாசிச ஜே.வி பி.யினர் இந்திய ராணுவம் வெளியேற வேண்டுமென்றகோரிக்கையை இனவாத அடிப்படையில் வைக்கின்றனர். ஜே. வி. பி., தமிழ்ஈழ தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை எதிர்ப்பதுடன் மலையகதோட்ட தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு பகுதியாக பார்க்கின்றனர். மேலும் ஜே.வி.பி. ஒரு தேசப்பற்றுள்ள ராணுவ அரசாங்கம் அமைக்க அழைப்பு விடுகிறது.

"1964-களில் லங்கா சமசமாஜக்கட்சி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் கூட்டரசாங்கத்தில் இணைந்ததைத் தொடர்ந்தே, அதன் காட்டிக் கொடுப்புகளின் பிரதிவிளைவாக நாட்டுப்புற பகுதிகளில் ஜே.வி.பி. இயக்கம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதே போல் வடக்கு, கிழக்குப் பகுதியில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தலைமைகளின் கீழ் தேசிய விடுதலை இயக்கங்கள் தோன்றின."

முதலாளித்துவ அரச இயந்திரத்தின், அதாவது தொழிலாளவர்க்கத்தை ஒடுக்குவதற்கான சாதனங்களில் ஒன்றான, ராணுவத்தைப் பற்றி ஸ்டாலினிச கம்யூனிச கட்சித் தலைமைகள் (சி. பி ஐ. (எம்), சி.பி.ஐ., ஐ.சி.பி.) ஏற்படுத்தும் எதிர்ப்புரட்சிகர பிரமையை அம்பலப்படுத்தி தோழர் ராம் பேசினார். மேலும் 1946-ல். பம்பாய் தொழிலாளர்கள், இந்தோனேசியாவின் தேசிய விடுதலை போராட்டத்தை நசுக்க, இந்திய ராணுவம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் அனுப்பட்டதை எதிர்த்து போராடினரென்றும், அந்த பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் தமிழ்ஈழத்தில் இந்திய ராணுவத்தின் தோல்விக்காக இந்திய தொழிலாளவர்க்கம் போராடவேண்டுமென்றும் ராம் கூறினார்.

ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகள் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தைப்பற்றியும், இந்திய ராணுவத்தைப்பற்றியும் ஏற்படுத்திய பிரமைகளே, தொழிலாளவர்க்கத்தினுள் குழப்பத்தை ஏற்படுத்தி செயலற்று இருக்கச் செய்தது என, ஸ்டாலினிசத் தலைமைகளின் காட்டிக் கொடுப்புகளை அம்பலப்படுத்தி தோழர் ராம் பேசினார்.

"ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைக்காக. ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாள வர்க்கம் போராடாதவரையில், அதுவும் விடுதலை அடைய முடியாது என மார்க்ஸ் அயர்லாந்தின் விடுதலைக்காக ஆங்கிலேயத்

★4ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையில் ஒரு ஐக்கிய முன்னணிக்கான அறை கூவல்!

ஜனவரி 5, 1989
பொதுச்செயலாளர்
அன்புள்ள தோழர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்தியகுழு, யு. என். பி. அரசாங்கத்தின் ராணுவ ஒடுக்குமுறைநடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஜே. வி. பி. யின் பாசிச தாக்குதல்களுக்கு எதிராகவும் தொழிலாளவர்க்க ஸ்தாபனங்களை பேணுவதற்கான ஒரு ஐக்கிய முன்னணி நடவடிக்கையை பிரேரித்து நவம்பர் 26, 1988-ல் அனுப்பிய கடிதத்திற்கு, இணைப்பாக இந்தக் கடிதத்தை அனுப்ப தீர்மானித்துள்ளது.

நாம், எமது முதலாவது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தோம் அதாவது யு.என். பி. அரசாங்கத்தால் இயற்றப்பட்ட புதிய சட்டங்கள், வேலை நிறுத்தங்களையும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் மரண தண்டனை வழங்கும் கிரிமினல் குற்றங்களாக்கியமை, இராணுவச் சட்ட ஆட்சியை நோக்கியபடிகளாகும். இப்படியான சட்டங்கள் தொழிற்சங்கங்கள் இருப்பதை செல்லாத தாக்கும் அளவுக்கு செல்லும் என்பது பற்றி உங்கள் ஸ்தாபனம் உடன்படும்.

இப்படியான நிலைமையில் தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களை நசுக்குவதில் எஸ். எல். எப். பி. மற்றும் யு.என்.பி. அரசாங்கங்களின் நீண்டகால முயற்சியில் ஏற்பட்ட தோல்வியின் விளைவாக ஆற்றொணு நிலையில், குட்டிமுதலாளித்துவ ஜே.வி பி. ஒரு பாசிச இயக்கமாக உருவெடுக்கிறது. அது தொழிற்சங்கங்களை செயல் இழக்கச் செய்து, உடைப்பதற்காக தொழிலாளர்களை பயங்கரவாதத்துக்கு உட்படுத்தியது. பல வேலைத்தளங்களில் அங்கே தொழிற்சங்கங்கள் சீராக செயற்படாத சூழ் நிலைமைகளின் கீழ், தொழிலாளர்கள் ஜே. வி. பி. பாசிஸ்டுகளின் கட்டளைகளுக்கு சரணடையும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

வேலைத்தளங்களில் தொழிலாளர்கள் ஸ்தாபனங்களை விழிப்படையச் செய்யவும், திடப்படுத்தவும், இந்த இரண்டு மிரட்டல்களுக்கும் எதிராக தொழிலாளர்களை அணி திரட்டவும் புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகம் தொழிலாள வர்க்கத்தின் பேரில் பேசும் அனைத்துக்கட்சிகளின்— குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். நவசமசமாஜக்கட்சி, தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகளின் ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கான முன் முயற்சியை அதன் நவம்பர் 26, 1988 கடிதத்தில் எடுத்துள்ளது.

இந்த கடிதத்தை எழுதியதிலிருந்து அரசியல் நிலைமை மேலும் சீரழிந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில்வெற்றி பெற்ற ஆர். பிரேமதாசா ஒரு கெட்ட பெயரெடுத்த தொழிற்சங்க விரோதி. 1980 ஜூலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சுடுகாட்டுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று, வர்த்தகம் மற்றும் கப்பல் போக்குவரத்து மந்திரியான லலீத் அத்துலத்முதலியினால் விடப்பட்ட ஐம்பமடிக்கும் மிரட்டல் கடிதத்துக்கு ஒரு மந்திரி கருவியாக இருந்திருப்பாரெனின் அது பிரதம மந்திரி பிரேம்தாசா ஆவார். அவருடைய முழு விருப்பம் ஏகாதிபத்திய வாதிகளும் உள்ளூர் முதலாளிகளும் தொழிலாளவர்க்கத்தை குரூரமாக சுரண்டுவதற்கான நிலைமையை உண்டாக்குவதற்காக தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களை அழிப்பதாகும். அதற்கு நாட்டுப்புறமக்களிடம் இருந்து வரும் ஒரு ஆத்திரமூட்டும் எதிரொலியை உபயோகப்படுத்துகின்றார்.

அவர் முன்னைய எஸ். எல். எப் பி. மற்றும் யு.என்.பி. அரசாங்கங்களினால்ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அனைத்து தொழிலாள விரோத சட்டங்களையும், விதி முறைகளையும் பயன்படுத்தி உடனடியாக அவரதுபிற்போக்கு தாக்குதலை தொடங்குவார். 'லாபங்கள் சம்பாதிக்கப்பட வேண்டும்' என்ற அவரது அனைத்துப் பேச்சும். உழைக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான மிரட்டும் போர்ப் பிரகடனமாக கருதப்படவேண்டும்.



கொழும்பில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதின ஊர்வலம்

இப்படியான கொள்கைகள், ஜே வி பி.யின் பாசிச நோக்கங்களுக்கு எதிரானவையாக அல்லாமல் அதற்கு துணைபுரிபனவாக உள்ளன ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஜே வி பி. யின் ரகசிய ''நிலைமையை கணக்கெடுப்பின்'' மற்றும் அவர்களது பரந்த ஆத்திரமூட்டும் இலக்கங்களிலிருந்து தற்காலிகமாக பின்வாங்கியதன் அர்த்தம், புதிய ஜனாதிபதியின் கொள்கைகளுடன் உடன்பாடுள்ளதாக தாம் எப்படி போக முடியுமென்பதையும், தமது சொந்த குண்டர் படைகளை பலப்படுத்துவது பற்றியும் தாமாகவே மதிப்பீடு செய்வதற்காகும். புதிய ஜனாதிபதி பாசிஸ்டுகளுக்கு தொடர்ந்து வேண்டுகோள்கள் விடுத்தது, அவர்களை அவரின் பின்னால் அணி திரட்டி, அவர்களை தொழிலாள வர்க்கத்திற்குஎதிரான உருக்குகரமாக உபயோகப்படுத்தும் ஒரு கணிப்பிடப்பட்ட நடவடிக்கையாகும். சிறையிலிருந்து சந்தேகத்திற்கிடமான ஜே. வி. பி. உறுப்பினர்களை விடுதலை செய்ததும், போர் நிறுத்தங்களும், அவசர நிலை அகற்றலும் இருபிற்போக்குசக்திகளுக்கு இடையே நடக்கும் எதிர்ப் புரட்சிகர பகுதியும் ரகசிய உடன்படிக்கைகளின் முழுமையும் ஆகும்.

அதே சமயம், தொழிலாள வர்க்கக் கட்சிகளின், தொழிற்சங்கங்களின் போராளிகளுக்கும் தலைவர்களுக்கும் எதிரான மிரட்டல்களும், காயப்படுத்தல்களும், படுகொலைகளும் தடையின்றி தொடர்கின்றன. பாசிச கொலைகாரர்கள் தேர்தலின் முன்னும் பின்னும்,

தோட்டப்பகுதி உட்பட அனைத்து தொழிற்துறைகளிலும் தொழிலாளர்களை வேட்டையாடினர். நாங்கள் சங்கத்தின் ஒரு பிரபலமான தொழிற்சங்க வாதியையும், மாத்தறையைச் சேர்ந்த ஒரு கம்யூனிட் கட்சி உறுப்பினரையும் படுகொலை செய்தது இப்படியான சம்பவங்களில் ஒன்றாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் உறுப்பினர்கள் ஆர். எ. பீட்டவல—இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர், பி எச் குணபால— பேராகலை ஐக்கிய பல்கலைக்கழக இளைய ஊழியர்சங்கத்தின் உறுப்பினர் இருவருமே ஜே வி பி யின் பாசிச ஆர்ப்பாட்டங்களை நாசப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜே வி பி கொலையாளிகளால் படுகொலை செய்யப்பட்டனர். ஜனாதிபதி தேர்தலிலிருந்து இரு வாரங்களுள் டஜன் கணக்கில் தொழிலாளர்களும், நாட்டுப்புற வறியவர்களும் கொல்லப்பட்டனர்.

இவ்வாருன நிலைமையில் தொழிலாளவர்க்கம நேரத்தை வீணுக்குவது தற்கொலைக்கு சமமானதாகும். இராணுவ சர்வாதிகாரம் வளர அனுமதிப்பதும், பாசிச மிரட்டல்களுக்கு சரணாகதி அடைவதும் சித்திர வதை முகாம்களையும், மரணத்தையும் தேர்ந்தெடுப்பதாக இருக்கும் இதை உணரும் தொழிலாளர்கள், இப்படியான எதிர்ப்புரட்சிகர சக்திகளை எதிர்க்க ஒரு தலைமையையும், ஒரு வேலைத்திட்டத்தையும் ஆர்வத்துடன் எதிர்பார்ப்பர்.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலைமையில் இருக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் உறுப்பினர்கள், ஜே வி பி பாசிஸ்டுகளால் தூண்டிவிடப்பட்ட வேலை நிறுத்தங்கள் என அழைக்கப்படுவனவற்றில் பங்கு கொள்ள மறுத்தனர். மத்திய வங்கி தொழிலாளர்கள் அந்த நிலைப்பாட்டைச் சூழ அணி திரண்டனர். அந்தக் கட்டத்தில், அவர்களால், பாசிஸ்டுகளின் அத்துமீறலை விலக்கி வைக்க முடிந்தது. அதேபோல், தலைமை வழங்கப்பட்டிருக்குமாயின் ஒவ்வொரு வேலைத்தளத்திலும் நிலைமை ஒத்ததாக இருந்திருக்கும்.

ஆனல் மிரட்டல், அந்த நடவடிக்கையினல் இல்லாது போகவில்லை. மத்திய வங்கி ஊழியர்சங்கத்தின் தலைவரான தோழர் எம். கிரிபண்டாவை கொலை செய்வதற்காக அவருடைய வீட்டிற்கு டிசம்பர் 25-ம் தேதி இரவு நான்கு ஆயுதம் தரித்த கொலையாளிகளை ஜே.வி.பி. அனுப்பியது. அது ஒரு திட்டவட்டமான சம்பவத்தை எடுத்துக் காட்டியது, அதாவது கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்க தலைவரான எல் டபிள்யு. பண்டித கொலை செய்யப்பட்டபின் மற்றுமொரு பிரபலமான தொழிற்சங்கத் தலைவருக்கு பாசிச குண்டர்கள் குறிவைத்தனர்.

நம் அனைவருக்கும் தெரியும் அதாவது இன்று ஜே.வி.பி. யின் பாசிச இயக்கத்தை வீரத்துடன் எதிர்க்கும் ஒவ்வொரு தொழிற்சங்க மற்றும் தொழிலாளவர்க்க கட்சிப் போராளியும் இதே மாதிரியான மிரட்டல்களுக்கு உள்ளாகிருர். திட்டவட்டமாக இந்தக் காரணத்தினல் தான், இப்படியான அனைத்து ஸ்தாபனங்களும் செயலில் ஒன்றுபட்டு தம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று பிரேரிக்கிறேம்.

தொழிலாள வர்க்க கட்சிகளாலும், ஸ்தாபனங்களாலும் எடுக்கப்படும் ஒரு கூட்டு முன் முயற்சியானது, சில கிராம பகுதிகளிலுள்ள வறிய மக்கள் மீது பெரும்பாலும் கையில் துப்பாக்கியுடன் ஜே. வி பி. நிலைநாட்டியிருக்கும் மெல்லிய ஆதிக்கத்தை உடைத்தெரியும்,

சில கூட்டு நடவடிக்கைகளை பிரேரித்து நவம்பர் 26, 1988-ல் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நவசமசமாஜக்கட்சி, தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுக்கு நாம் அனுப்பிய கடிதத்திற்கு லங்காசமசமாஜக் கட்சி மட்டுமே பதிலளித்துள்ளது. நாம் லங்கா சமசமாஜக் கட்சிக்கு நன்றி தெரிவிக்கிறேம். அந்தப்பதில் குறிப்பிட்டதாவது, அவர்கள் எமது கடிதத்தை தேவையான கமிட்டிகளுக்குதெரியப் படுத்துவார்கள் என்பதாகும்.

நாம் வேறு ஒரு பதிலையும் பெறவில்லை. மிகக்குறைந்தளவில் சொல்வோமாயின், எமது அனைத்து ஸ்தாபனங்களும, எமது அனைத்து உறுப்பினர்களும் மிகப்பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதை நாம் கருதிப்பார்க்கையில், இப்படியான நிலைப்பாடு மிக அதிகமாக அதிருப்தி அளிப்பதாக இருப்பதாக நாம் கருதுகிறேம.

இப்படியான ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளினல் எந்த ஒரு ஸ்தாபனமும் அதன் வேலைத்திட்டத்தைக் கைவிடும்படி கடமைப்படுத்தப்படவல்லை என்பதை நீங்கள் அறியவேண்டும்.

யு. என்- பி அரசாங்கத்தின் சர்வாதிகார நடவடிக்கைகளையும் அதேபோன்று ஜே வி பி பாசிஸ்டுகளையும் எதிர்கொள்ள, தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுவதற்கான குறைந்தபட்ச நடைமுறை பாதுகாப்பு நடவடிக்கைககளில் ஒரு உடன்பாட்டிற்கு நாம் அழைப்பு விடுத்தோம். பின்வரும் அம்சங்கள் சம்பந்தமாக நாம் கூட்டு விவாதம் நடத்த விரும்புகிறேம்:

(1) ஒவ்வொரு ஆலையிலும் ஒவ்வொரு தொழிலாள வர்க்க குடியிருப்பு பகுதிகளிலும பாதுகாப்பு அணிகள் அமைத்தல்மற்றும் அவற்றை வழிநடத்துவதற்கான செயற்குழுக்களை அமைத்தல்.

(2) கூட்டு மறியல் போராட்டம் உருவாக்குதல்.

(3) கூட்டு ஊர்வலங்கள் நடத்தல்.

(4) ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தல்.

எமது முதல் கடிதத்தின் பின்னைய காலப்பகுதியில் உக்கிரப்படுத்தப் பட்டிருக்கும் எதிர்ப்புரட்சி அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு நாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாவது நமது ஸ்தாபனங்களுக்கு இடையேயான ஒரு கூட்டு விவாதத்திற்கான ஏற்பாடுகள்செய்வதுபற்றி விவாதிக்க சந்திப்பதற்கு ஒரு சௌகரிய தேதியையும் நேரத்தையும் தெரியப்படுத்துவீர்கள் என்பதாகும்.

நாம் ஒரு சீக்கிரமான பதிலை எதிர்பார்க்கிறேம்.

உங்கள் தோழமையுள்ள
விஜேடயஸ்
புரட்சிக்கம்யூனிஸ்ட் கழக
பொதுச்செயலாளர்.

★3ம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளவர்க்கம் போராட வேண்டுமென்று கூறியதை நினைவு படுத்தி, மார்க்ஸ், லெனின் வழியில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களில் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தொழிலாள வர்க்கம் முன்னெடுக்கவேண்டுமென்று ராம் கூறினர்.

இறுதியாக பேசிய தோழர் அருண்குமார், இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டம், உலக ரீதியாக திருத்தல் வாதிகளுக்கும், சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிரான போராட்டத்துடன் பின்னிப்பிணைந்தது என்பதை விளக்கினர். புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகத்தின் செயலாளராக 20 வருடகாலமாக செயலாற்றிய தோழர் கீர்த்தி பாலசூரியாவும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழ்கமும் 1971—களிலேயே, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினுள் அப்போது ஆதிக்கம் செலுத்திய பிரிட்டனைச் சேர்ந்த தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (WRP) திருத்தல் வாதப் போக்கை எதிர்த்துப் போராடினர். 1971-ல் பங்களாதேஷில் இந்தியராணுவத்தின் தலையீடு முற்போக்கானது என பண்டாவும், ஏனைய தொ. பு. கட்சி தலைமையும் கூறும்போது, அதற்கு மாறாக இந்திய ராணுவத்தின் தலையீடு பங்களாதேஷில் வளரும் புரட்சிகரசக்திகளை [illegible] முதலாளித்துவத்தை பேணவுமென்றும், இந்திய தொழிலாளர் [illegible] இந்திய ராணுவத்தின் தலையீட்டை எதிர்த்து பங்களாதேஷின் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்திற்குஆதரவளிக்க வேண்டுமென தோழர் கீர்த்தி பாலசூரியாவும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் போராடினர்.''

தோழர்கள் கீர்த்தி பாலசூரியா, பீட்டவல குணபால ஆகியோரை நாம் இழந்தது கவலையை ஏற்படுத்தினும், மிகக்கஷ்டமான சூழ்நிலைமைகளின் கீழ், புரட்சிகர டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தைப்பேண அவர்கள் நடத்திய போராட்டம் உலக முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கும் புரட்சிவாதிகளுக்கும் உற்சாக மூட்டுவதாக இருக்கிறதுஎன அருண்குமார் கூறினர்.

சார்பு ரீதியாக எமது இயக்கம் சிறியதாக இருப்பினும்க் பண்பில் அதன் கோட்பாட்டு ரீதியான சர்வதேச போராட்டம், அதன் எண்ணிக்கையிலும் பிரமாண்டமான மாற்றத்தை உண்டு பண்ணும். இன்றைய ஆழமான ஏகாதிபத்திய முதலாளித்துவ நெருக்கடியும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் நெருக்கடியும் முன்னெருபோது இல்லாதவகையில் டிராட்ஸ்கியினதும் நான்காம் அகிலத்தினதும் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியிருப்பதுடன்," இது நான்காம் அகிலத்தின் சகாப்தம் [illegible]தையும் அருண் குமார் [illegible]னர்.


கூட்டத்தின் இறுதியில் [illegible] வளர்ச்சி நிதிக்கு ரூ 135 திரட்டப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்குகளின் தீர்மானம்



போலந்தின் சமீபத்திய வேலை நிறுத்தங்கள் சோவியத் யூனியனில் வரவிருப்பதன் ஒரு எதிர்பார்ப்பு

58. தங்களுடைய வேலைத்திட்ட திருத்தல்கள் மற்றும் ஸ்டாலினிச குற்றங்களை மூடி மறைத்தல் ஆகிய இரண்டினாலும் பப்லோவாதிகள், நான்காம் அகிலத்தை ஸ்டாலினிசத்திற்கெதிரான புரட்சிகரப் போராட்டங்களிலிருந்து திசை திருப்பி, அதிகாரத்துவத்தின் மேல் பிரமைகளை வளர்க்க முயற்சித்ததோடு டிராஸ்கியினுடைய ஆய்வின் உள்ளடக்கத்தைத் திரிக்கவும், அதன் புரட்சிகர முனைப்பை மழுங்கடிக்கவும் நான் அகிலத்தின் சுதந்திரமான வேலைத்திட்டத்தை அரசியல் ரீதியில் அழித்தலை நியாயப்படுத்தவும் முயன்றார்கள். பப்லோவாதிகளின் டிராட்ஸ்கிசம் பற்றிய இந்த திரித்துப் புரட்டல்களை திரும்ப நினைவு கூறுவோமாயின்—அவ்வளவு வெளிப்படையாக வரலாற்றால் அது தவறானதென நிரூபிக்கப்பட்டிருக்கிறது—அதை நினைவு கூறுவது ஒரு புலமைவாதப் பயிற்சி அல்ல. இன்றைய காலப்பகுதியில ஸ்டாலினிச நெருக்கடியால் முன் வைக்கப்படும் புதிய அரசியல் சாவல்களை எதிர்கொள்ள, திருத்தல் வாதத்திற்கு எதிரான போராட்டத்தின் படிப்பினைகளை உள்வீர்த்துக் கொள்வது இன்றியமையாதது.

## சோவியத் யூனியன் இன்று

59. அதிகாரத்துவ சுயசீர்திருத்தத்தின் நீண்ட நிகழ்வுப் போக்கில் புதிய மற்றும் உச்சக்கட்டத்திற்கு அப்பால், பெரஸ்துரொய்கா மற்றும் கிளாஸ் நோஸ்த்—அந்த வகையான முட்டாளின் கையிலுள்ள பித்தளைத் தங்கம் ஆர்வத்துடன உலகெங்கிலும் உள்ள சந்தர்ப்பவாதிகளால் தழுவிக்கொள்ளப் படுகிறது. சர்வதேச தொழிலாள வர்க்கத்தையும் மற்றும் சோவியத் யூனியனுக்குள்ளேயே அக்டோபர் புரட்சி வெற்றிகளை தாக்கும் வண்ணம், ஏகாதிபத்தியத்துடனான அதிகாரத்துவத்தின் கூட்டை பண்பியல் ரீதியாக ஆழப்படுத்துவதை இது பிரதிநிதித்துவம் செய்கிறது அதிகாரத்துவ ஜாதி, தனது ஆட்சிக்கான உறுதியான சமூக அடித்தளங்களை நிர்மாணிப்பதற்கான —அதாவது அதனையே ஒரு உண்மையான ஆளும் வர்க்கமாக உருமாற்றிக் கொள்ளும முயற்சிகள்—கோர்பச்சேவினால் கடைபபிடிக்கப்படும் கொள்கைகளிலும், அவை மிகவும் விடாப்பிடியானதாகவும் மற்றும் நனவாகவும வெளிப்படுகிறது.

60. ஸ்டாலினிசம் நீண்ட காலத்துக்கு முன்பே உலகப் புரட்சி வேலைத் திட்டத்தை நிராகரித்து விட்டது. ஆனால் தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றும் பொருட்டு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டதுடன் சோவியத் யூனியனை பெயரளவில் இணங்காட்டிக் கொள்வதைப் பேணுவது அவசியம் எனக் கண்டது சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்துடன் நெருக்கமான உறவுகளைப் பெறவேண்டி, கோர்பச்சேவ் அக்டோபர் மரபுகளுடனான இந்த பெயரளவிலான தொடர்பினையும் கூட நிராகரித்து விட்டார். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின (C P. S U.) 27 வது காங்கிரஸ், சமாதான சகவாழ்வு ஒரு திட்டவட்டமான வர்க்கப் போராட்டம்'' என்ற நீண்ட காலக்கோரிக்கையையும் உத்தியோகப் பூர்வமாக நிராகரித்ததோடு, யுத்தத்தின் வெடிப்பிலிருந்து எழும் ஏகாதிபத்தியத்திற்கெதிரானபுரட்சிகர எழுச்சிகள் தொடர்பான குறிப்புக்களையும் அதனுடைய வேலைத்திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது. ஜூலை 1988—ல் வெளிவிவகாரக் கொள்கை நிபுணர்களிடம் மாநாட்டில், ''பகைமையுடைய இரு அமைப்புகளுக்கிடையிலான போராட்டம் இந்த தசாப்தத்தில ஒரு தீர்மானிக்கும போக்கை இனி கொண்டிருக்காது'' என்று சோவியத் வெளிவிவகார அமைச்சா எட்வாடு செவர்நட்சே கூறினார். மற்றும் சுற்றுப்புறசூழல் கேடுகள் வறுமை, போரின் பிரச்சனைகள் ஆகியவை முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்துடன் சம்பந்தமில்லாததுடன், அதற்கும் மேலான முக்கியத்துவம் உடையதாகி விட்டன என்றும் அவர் வலியுறுத்தினார்.

61. கோர்பச்சேவ் தனது ''பெரஸ்துரொய்கா'' என்ற நூலில் ''வர்க்க நலன்களுக்கு மேலாக அனைத்து மனித இனத்தினதும் பொது நலன்களுக்கு முன்னுரிமை'' என்பதில் தனது நம்பிக்கையை உலகுக்குப் பிரகடனம் செய்கிறார். இந்த சொற்றொடர், கோர்பச்சேவின் கொள்கைகளை வழி நடத்தும் முழுமையான முதலாளித்துவ வர்க்கக கண்ணோட்டத்தினை அம்பலமாக்குகின்றது தமமேல் தொழிலாள வர்க்கத்தினால் திணிக்கப்பட்டவரையறைகளில் இருந்து முழுமையாய் விடுபடுவதற்கான அதிகாரத்துவத்தின் தவிப்பினை இது காட்டுகின்றது. ''வர்க்க நலன்களை'' வெறுமனே பிரதிநிதித்துவம் செய்யும் அரச சொத்துக்களைப் பேணுவதற்கு எதிராக கோர்பச்சேவ் ''அனைத்து மனித இனத்தினதும்'' நலனின் பேரில் தனிச்சொத்துடைமைக்கும் தனிப்பட்ட சொத்துத்திரட்சிக்கும் எதிரான சட்டங்களை நீக்கிவிட வாதிட்டு வருகின்றார்.

62. தசாப்தங்களாக, அதிகாரத்துவம் பறித்தெடுத்த அரசியல் அதிகாரம் அதன் சலுகைகளுக்கு அரணாக சேவை செய்தது; அதிகாரத்துவ அபகரிப்பாளர்கள், இன்று உண்மையான சோவியத் ஜனநாயகத்தை யதார்த்தமாக்கும் பொருட்டு அந்த அதிகாரங்களைக் கைவிட்டு வருகின்றார் என தீவிரமாக (Seriously) நம்புவதானது மார்க்சியத்தை அடியோடு நிராகரித்து விடுவதாகும். அதிகாரத்துவ பெருக்கமும் அதன் எதேச்சாதிகாரமும், 1917 அக்டோபரின் பின்னர் நிலைநாட்டப்பட்ட உற்பத்திச் சாதனங்களில், சமூக சொத்துடமைக்கும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழிற்துறைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை முதலாளித்துவ முறையில் விநியோகம் செய்வதற்கும் இடையேயான குரோதத்துடன் பிணைந்துள்ளது. அதிகாரத்துவ எதேச்சாதிகாரத்தினை சமாதான வழியில் இல்லா தொழிப்பது என்பது, இந்த குரோதம் தீர்க்கப் பட்டுவிட்டதைக் குறிக்கும். அதாவது உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியானது, அத்தகைய ஒரு உச்ச கட்டத்தை அடைவதன் மூலம் சமத்துவமின்மை தாண்டப்பட்டு, முதலாளித்துவ விநியோகத்தை அமுல் செய்வதற்காக, அரச நிர்ப்பந்தத்தினைப் பயன் படுத்துவதற்கு எவ்விதமான புறநிலை அடிப்படையும் இனி இல்லை என்பதாகும் உண்மையில் அதுதான் நிலைமையாயின், ஸ்டாலின் - புக்காரின் கோட்பாடான 'தனி நாட்டில் சோசலிசம்' நிரூபிக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

63. ஆனால் முதலாளித்துவ விநியோக முறைகளை வென்றதற்கு வெகு தூரத்துக்கு அப்பால், சோவியத்தின் சீர்திருத்தம் இன்னும் பெருமளவு சமூக சமத்துவமின்மையை வேண்டி நிற்பதாய் கோர்பச்சேவ் தலைமை வலியுறுத்துகிறது. 1917-ஆம் ஆண்டின் சோசலிச மரபிற்கு சோவியத் பாட்டாளி வர்க்கம் காட்டும் ஆழ்ந்த விசுவாசம், சமத்துவப் போக்குகளைச் சாடும் கோர்பச்சேவின் சித்தப்பிரமையான அதிகமான கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது. 1988-பெப்ரவரி 18-ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின்முன் 'புரட்சிகர பெரஸ்துரொய்கா' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையில் கோர்பச்சேவ், ''இன்று வெறும் அரசின் 'தருமத்தில்' தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது'' என எச்சரித்தார். மற்றும் தனியார் செல்வத்தின் பெருக்கம் சம்பந்தமாக தொழிலாளர்களின் எதிர்ப்பின் மீது கோபாவேசத்தை வெளியிடும் கோர்பச்சேவ், ''மட்டப்படுத்தும் போக்குகளை ஒழித்துக்கட்டுவதான பிரச்சனைகளில் நாம் உண்மையான மனப்பூர்வத்துடன் இறங்க வேண்டும். இது பெரிதும் முக்கியமான சமூக, பொருளாதார மற்றும் தத்துவார்த்த விவகாரமாகும் அனைத்து நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் மட்டப்படுத்தும் போக்கானது, பொருளாதாரத்தின் மீது மட்டுமின்றி மக்களின் நல்லொழுக்கங்களிலும் மற்றும் அவர்களின் சிந்தனை, நடவடிக்கை பற்றிய முழு வழிமுறைகளிலும் ஒரு அழிவுகரமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது'' என்று கூறுகிறார். (சோவியத் செய்தியிலிருந்து மறு பிரசுரிப்பு 1988-மார்ச் 31)



சோவியத் தொழிலாளர்

64. ''பெரஸ்துரொய்காவின்'' சமூக பொருளாதார உள்ளடக்கத்தை ஆராயாமல், கோர்பச்சேவின் 'கிளாஸ் நோஸ்தின்' உண்மையான முக்கியத்துவத்தை தீர்க்கமாய் மதிப்பிட்டுவிட முடியாது. ஹீலி போன்ற மார்க்சிசத்தின் ஓடுகாலிகள், அவர்களுக்குள் இத்தகைய ''சிறிய'' விபரங்களைப்பற்றி சட்டை செய்வதாய் இல்லை. ஆனால் கோர்பச்சேவ் ''அரசியல் புரட்சியை'' முன்னெடுத்துச் செல்வதாக ஹீலி வாதிடும வேளை, விருப்பிய முடிவு காணத்தக்கவாறு சாதுரியமாக நாவசைக்கும் கோர்பசசேவின், அதிகாரத்துவ ''ஜனநாயக மயமாக்கலின்'' பிரதான இலக்கு-தொழிலாள வர்க்கத்தின் பிரதானமான சோசலிச வெற்றிகளின் மேல் தீர்க்கமான தாக்குதலுக்காக அதிகாரத்துவத்தின அதி கூடிய சலுகை கொண்ட பிரிவினருக்குள்ளும், அறிவுஜீவிகள் மற்றும் பெரிய அளவிலான சிறு தொழில் அதிபர்கள் ஆகியோருக்குள்ளும் ஆதரவினைத் திரட்டுவதற்கே ஆகும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. கோர்பச்சேவின் முக்கிய பொருளாதார ஆலோசகர்களுள் ஒருவரான டட்டியானா சாஸ்லாவ்ஸ்கயா, திட்டமிடல் அடிப்படைக் கொள்கைகள், மற்றும் தொழிலாள வர்க்கம் சம்பந்தமான தனது வெறுப்பினை மூடி மறைக்க சிறிதளவே முயற்சிப்பவராவார்; அவர் சோவியத் பொருளாதாரத்தை பரவலாக்குதல் மற்றும் தேசியமயமாக்கலை ஒழித்தல் ஆகியவற்றிலிருந்து ஆதாயமடையக் கூடிய சமூக குழுக்களைக் கொண்ட நீண்ட பட்டியலை தயார் செய்துள்ளார் அப்பெண்மணி எழுதயிருப்பதாவது, ''உற்பத்தி உறவுகளில் முன்னேற்றம் காண்பதில் வெற்றிகரமான நல்ல சிந்தனைமிக்க சமூக மூலோபாயம் இருப்பது அவசியம். ஒருபுறத்தில் பொருளாதாரத்தை துரிதப்படுத்துவதில் மற்றும் நிர்வாக வழி முறைகளை மாற்றி அமைக்கவும் தொடர்பான உண்மையான அக்கறை கொண்ட குழுக்களை உள்ளீர்க்கவும், மறு புறத்தில், சிக்கலான பிரச்சினைகளில் முடிவெடுப்பதைத் தடை செய்யும் குழுக்களின் நடவடிக்கைகளை தடுக்கவும் இலாயக்கானதாக இருக்க வேண்டும்'' என்கிறார்

65. சோவியத் விவாதங்களில் ''பொருளாதாரத் துரிதமாக்கல்'' என்ற பதத்துக்கு ஒரு திட்டமான அர்த்தம் உண்டு: அதிகரித்த கூலி வேறுபாடுகளை ஊக்குவிப்பது மற்றும் வேலையின்மையை சட்டரீதியாக்கல், கடுமையான நிர்வாக முறைகளைப் பயன்படுத்துதலின் மூலம் ''தொழில் ஒழுங்குகள்'' ஊடாகவும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட நிர்வாக முறைகளையே அது அர்த்தப்படுத்துகிறது. கோர்பச்சேவின் கர்த்தாக இருக்கும் மற்றொரு முக்கியமான சோவியத் பொருளாதார நிபுணரான வசிலிசெலியுனின் எழுதியதாவது: ''(மேற்கில்) அவர்கள் வேலையின்மையைக் கொண்டிருக்


★ 6-ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் முன்நோக்கு



**வர்க்கப் போராட்டத்தை அதிகாரப் பூர்வமாய் கைவிட்டுவிட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸ்**

கின்றனர். சொல்லின் முழு அர்த்தம் மேலதிக மக்கள் இருககின்றனர் ஆனல் மற்ளெருபுறம் வேலை செய்ய வேண்டியவர்களிடமிருந்து கடின உழைப்பு கறந்தெடுக்கப்படுகிறது நாம் வேலையின்மையை மறந்துபோயிருக்கிறேம், ஆனல் குறித்த காலத்தில் அரைப் பகுதி பலத்தில் நாம் வேலை செய்வது நல்லதா?'' சோவியத் யூனியனில் இடம் பெறும் விவாதங்களை கவனமாக ஆராய்ந்த அமெரிக்க முதலாளித்துவ அறிஞர் ஒருவர்' ''தீவிரவாத சீர்திருத்த வாதிகளில் ஒருவரான லியோனிட் அல்பாக்கிஃ கருத்துக்கள் பரந்த அளவில் சோவியத் பிரசுரங்களில் வெளியிடப்படுவதை கவனித்து அண்மையில் கருத்துத் தெரிவித்ததாவது ''நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவம் ஆகிய இரண்டும் ருசியின்மையைக் கொண்டிருந்தது அல்லது கொண்டிருக்கிறது. ஆனல் இருந்த போதிலும் உழைப்பை ஒழுங்கு முறைப்படுததுவதற்கான சக்தி வாய்ந்த செயல் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. சோசலிசமே. இன்னும் நன்கு மனிதாபிமான மிக்க ஒழுக்க வடிவங்கள் பற்றிய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவில்லை'' எனகிருர். (ஹேவட், சோவியத் பொருளாதாரத்தின் சீர் திருத்தம், வாஷிங்டன் 1988, பக்கம் 293-294)

66. ஹேவட்டின்படி, ''வேலையின்மைக்குப் புறத்தே, கலந்துரையாடலுக்குள்ளாகியிருக்கிற முக்கிய பிரச்சனைகள், திவால் நிலைமை, வருமானத்தில் சமத்துவமின்மை மற்றும்— மிகவும் நெருக்கமான தொடர்புடைய விஷயமான —சோசலிச நாட்டில் தனியார் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உரிய பங்குபற்றியதாகும. உண்மையில் கோர்பச்சேவின் கொள்கைகள், திட்டமிட்ட பொருளாதாரத்தை ஒழித்தல், அரசு தொழிற்துறையின் பெரும் பகுதியை அழித்தல் மற்றும் வெளி நாட்டு வர்த்தகத்தில் ஏகபோகத்தை ஒழித்தல் ஆகியவற்றுக்கான, சட்டரீதியான அடித்தளங்களை நிறுவியுள்ளது. அதே சமயம் சோவியத் யூனியனுள்ளே, உற்பத்தி சக்திகளில் தனியார் உடைமையும், பரந்த அளவில் கூலி உழைப்பை மறு நிர்மானம் செய்வதும் அதிகாரத்துவத்தால் கொணடுவரப்படுகின்றன

67. 1988 மார்ச்சில் அறிமுகம் செய்யப்பட்ட கூட்டுறவுகள் சம்பந்தமான வரைவுச் சட்டம் முதலாளித்துவம்மீண்டும் தோன்றுவதற்கான தீர்க்கமான நிலையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ''கூட்டுறவுகள்'' எனப்படும் பதம் தனியார் கார்ப்பரேஷன்களுககான ஒரு நாசூக்கான பதமாகும். மற்றும் அவற்றின் தோற்றங்கள் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் மிகத் தெளிவாக ஊக்குவிக்கப்பட்டுள்ளது கூட்டுறவு உடமையாளரின ''சொத்து நலன்களைப்'' பேணுவதாக வரைவுச் சட்டம் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்து ''அது மீறக் கூடாதது' என்றும் அது அரச பாதுகாப்பில் இருக்கிறது'' என்றும் பிரகடனப்படுத்துகிறது. ''அது அரச சொத்துடன் ஒரே சமமதிப்பில் சட்டத்தினுல் பாதுகாக்கப்பட்டுள்ளது.'' ஒரு கூட்டுறவு ''சொந்த கட்டிடங்களை, அமைப்புகளை, இயந்திரங்களை, உபகரணங்களை, போக்குவரத்து வசதிகளை உற்பத்தி மற்றும் குறிப்பு எழுதப்பட்ட, உயிருள்ள கையிருப்புகளை, பூர்த்தியான உற்பத்திப் பொருட்கள், நாணய வளங்கள் மற்றும் அதன் தேவைகளை பூர்த்தி செய்யும் சொத்து போன்றவற்றை சொந்தமாக வைத்திருக்கலாம்,'' என்று வரைவுச்சட்டம் கூறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கூட்டுறவை அமைபபதற்கு ''அரசாங்கத்திடமிருந்தோ பொருளாதார அல்லது ஏனைய அதிகாரப்பிரிவினரிமிடருந்தோ ஒரு விசேடப் பத்திரமும் தேவையில்லை,'' என்கிறது.

68. கூட்டுறவுகள், தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்தும் உரிமையை, இச்சட்டம் தருகின்றது. ஏனைய முதலாளித்துவ நாட்டிலுள்ளதைப் போல, கூட்டுறவுகள் 'தொழிலாளியுடன் ஒப்பந்தம் செய்யலாம், சம்பளம் பரஸ்பர உடன்பாட்டிற்கு உட்பட்டது . வேலை நாள், காலம், மற்றும் வழக்கமான வேலை முறைகள், வழக்கமான மற்றும் மேலதிக ஒய்வு நாள் ஏனைய நிலைமைகள், கூட்டுறவின் உள்-மனை விதிகளுக்த உட்படுத்தப்பட வேண்டும்.'' அரச தொழில் துறையின் பெரும் பகுதிகளை வேண்டுமென்றே திவாலடையச் செய்வதன் மூலமாக, இப்படியான சோவியத் கூட்டுறவுகளில், அவர்களது உழைப்பை விற்க நிர்ப்பந்திக்கப்படும்படியாக, ஒரு பிரம்மாண்டமான அளவில் வேலையில்லாத தொழிலாளர்களின் அளிப்பினை (Supply) உண்டுபண்ண அதிகாரத்துவம் திட்டமிடுகிலறது. இந்த சட்டம் பிரகடனப்படுத்துகிறது; ''இழப்புகள தீர்க்கமுடியாமை, தேவை (Demned) இல்லாமை போன்றவற்ருல் மூடப்பட்ட சிறிய, நடுத்தர செய்பொருள் ஆலைகள், விவசாயம், கட்டிடம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களின் அடிப்படையில் அரசு ஏஜென்சிகள், கூட்டுறவுகளை அமைக்கலாம்... ..அவை இழந்தவர்களின் சொத்தை இயங்குகின்ற அல்லது திட்டமிடப்பட்ட கூட்டுறவுகளுக்கு மாற்றலாம்.'' அரச தொழில் துறைகளின் போஷாக்கு மிக்க பகுதிகளை, கூட்டுறவுகளாக மாற்றுவதன் மூலம் தமது தனிப்பட்ட (அல்லது அவர்களது உறவினர்களின்) அதிர்ஷ்டங்களை அடையும் சந்தர்ப்பததைச் உணர்ந்து கொள்ளும் அதிகாரத்துவத்தினர், இந்த சட்டத்தைச் சாதகமாக்கி, முன்பு மீளமுடியாத அரச சொத்தாக இருந்தனவற்றின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பார்கள் என்பதை முன்கூட்டியே பார்ப்பது கடினமானதல்ல.

69. உலக முதலாளித்துவத்துடன் கூட்டுறவுகள், தொடர்பு கொள்வ அனுமதிக்கும் வரைவுச் சட்டம் பிரகடனப்படுத்துகிறது : ''பெரும் கூட்டு களும் சர்வதேசரீதியாக போட்டியான அவர்களது கூட்டுக்களும், ஏற்றும இறக்குமதி வியாபாரங்களை அவர்களாகவே நடத்துவதற்கு அனுமதிக் படலாம்; கூட்டுறவுகளும் அதன் கூட்டுக்களும்' வெளிநாட்டுச் செலாவ யைப் பயன்படுத்தி, உற்பத்தி, வர்த்தகம், சமூக செளகரியங்க போன்றவற்றை வளர்ச்சியடையச் செய்ய பண்டங்களையும், சேவைகளைய இறக்குமதி செய்யலாம்'' மேலும் அது கூறுகிறது, ''கூட்டுறவுகளு அவற்றின் கூட்டுக்களும் அவர்களுடைய வெளிநாட்டு பங்குதாரருட ஒன்ருக இணைந்து, கூட்டுநிறுவனங்களை சிறப்பாக்குவது பற்றியும் தேசை விலைகள் மற்றும் ஏனைய சந்தைக்காரணிகளிலிருந்து ஆரம்பித்து உற்பத்தியி அளவையும், வகையையும் தீர்மானிக்க வேண்டும். கூட்டு நிறுவனங்க இந்த நாட்டிலாவது அல்லது வேறு எங்காவது அமைக்கப்படலாம்....... சோவியத் கூட்டுறவுக்கும் அவற்றின் கூட்டுக்களும், சர்வதேச கூட்டுற அமைப்புகளின் நடவடிக்கைகளில் பங்கெடுக்கலாம்' இறுதியாக அந் சட்டம் பின்வருமாறு கூறுகிறது, ''சோவியத்யூனியனின் பொருளாத அமைப்பு, கூட்டுறவுகளில் பிரஜைகள், ஒன்றுபடும் அவர்களது அரசி லமைப்பு உரிமையை உறுதி செய்ய வேண்டும், உற்பத்தி சாதனங்க மீதான கூட்டுறவுகளின் உடமையையும் சட்டபூர்வமான சொத்துக்க அங்கீகரிக்க வேண்டும். மற்றும் கூட்டுறவுகளை அரசு ஊக்குவிக்க வேண்டும்.

70. சோவியத்யூனியனுக்குள் நடக்கும் மாற்றங்கள், முதலாளித்துவ மீண்டும் கொண்டுவரப்படுவதற்கான சாத்தியமான வடிவங்கள் பற் விவாதிக்கையில் டிராட்ஸ்கி வலியுறுத்திய அதே காட்சிகளை மிக சக் வாய்ந்த முறையில் உறுதிப்படுத்துகிறது : எல்லாவற்றுக்கும் முதல் பலவீ மான கூட்டுப் பண்ணைகளில் பலமான விவசாயிகளின் வளர்ச்சிக்கான நிலை களையும் மற்றும் பலமான கூட்டுப் பண்ணைகளை. முதலாளித்துவ வகையா உற்பத்தியாளர் கூட்டுறவுகளாக—விவசாய சேகரிப்பு கம்பெனிகளாக உ வாக்குவது அவசியமானதாக வரும். தொழிற்துறையைப் பொறுத்த அளவி தேசியமயமாக்கப்பட்ட நிலையை நீக்குவது இலேசுரக தொழிற்துறையுடனு (Light Industry) உணவை உற்பத்தி செய்யும் தொழிற்துறையுடனு ஆரம்பிக்கும் இடைமருவு காலத்திற்குத் திட்டமிடும் கோட்பாடானது, அ அதிகாரத்திற்கும் தனியார் கூட்டுறவுகளுக்கும்'—சோவியத்தின் தலை தாங்கும் தொழிற்துறை மத்தியில், உருவாகக்கூடிய சாத்தியமுள்ள முதலா களுக்கும்—இடையில் ஒரு தொடர்ச்சியான சமரசமாக மாற்றப்படும். (லியான் டிராட்ஸ்கி காட்டிச கொடுக்கப்பட்ட புரட்சி. நியூயா பப்ளிகேஷன்ஸ், 1973, பக்கம். 253.

71. 'கிளாஸ் நோஸ்து' சோவியத் ஜனநாயகத்தின் ஒரு உண்மையா புதுப்பித்தலை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. இன்னும் சரியாகக் கூற போனல், இது பாட்டாளிவர்க்கத்தின் அரசியல், சமூக அந்தஸ்தினை மேலு பலவீனப்படுத்துவதன் மூலம் அதிகாரத்துவத்தினுள்ளும், சோவியத் சமூக தினுள்ளும், முழுமையாக முதலாளித்துவப் போக்குகளைப் பலப்படுத்தும் தின யில் திருப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மிகவும் குறிப்பிடத்தக்கது என் வென்ருல், ஒரு முதலாளித்துவ பாணியிலான பாராளுமன்றத்தையும், போ பாட்டிச மாதிரியிலான ஜனதிபதியையும் கொண்ட ஒரு புதிய அரசாங் அமைப்பினை நிறுவ எடுக்கப்பட்டுள்ள தீர்மானமாகும். 1917-அக்டோபரி நிர்மாணிக்கப்பட்ட சோவியத் அரசிற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் இடை யிலான வரலாற்றுத் தொடர்பினை மேலும் சீர்குலைப்பதே இந்த''சீர்திருத்த தின்'' அடிப்படை நோக்கம் ஆகும். இந்தச் சீர்திருத்தங்கள் ''பெரஸ் ரொய்கா''வை அமல் செய்ய எந்த அளவிற்கு இன்றியமையாதது எ கோர்பச்சேவ் பிரகடனப்படுத்தி இருக்கிருரோ, அந்த அளவு மறுக் முடியாதபடி அதிகாரத்துவத்தின் சலுகை மிக்க பகுதிகளினல் பின்பற்றப்படு நடைமுறை இலக்த, சஸ்லவாஸ்கையா வலியுறுத்துவது போன்று,முதலாளி துவ உறவுகளும் தனிச் சொத்துடமையும் வளர்ச்சி காண்பதற்குத் தடையா உள்ள தொழிலாள வர்க்கத்தின் குறுக்கீடுகளைத் தடுப்பதற்கேயாகும். மேலு தமது ஏகபோக அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள அதிகாரத்துவத்தா உருவாக்கப்பட்ட, பயங்கரவாத செயல்முறை முழுவதும் அப்படியே தொட படாது இருக்கிறது கே ஜி பியின் அதிகாரங்கள் குறைந்து போகவில்லை அத்துடன் எண்ணற்ற பல்லாயிரக் கணக்கான புரட்சியாளர்களின் கொலை குப் பொறுப்பானவர்கள் எவரும் இன்னமும் இனங்காணப்பட்டுத் தண்டிக்க படவில்லை மற்றும் நகோர்னு-கரபாக் சம்பவங்கள், தமது சொந்த நடவடி கைகள் மூலம் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க சோவியத் வெகு ஜன கள் எடுக்கும் எந்தவொரு முயற்சியும் ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்க படும் என்பதை மீண்டும் சுட்டிக்காட்டுகின்றன.

72. தனிச் சொத்துடமையை திரும்பக் கொண்டு வர சட்டரீதியா கட்டமைப்பை உண்டு பண்ணவும், உண்மையில் முதலாளித்துவத்தை ம அறிமுகம் செய்யவும் மற்றும் சோவியத் பாட்டாளி வர்க்கத்தை கூலி அடிமை களாக மாற்றுவதற்கும் அதிகாரத்துவத்துக்கு இவை போதுமானவை அல் அதனுடைய இலக்குகளை யதார்த்தமாக்குதல் நிர்வாக நடவடிக்கைக காட்டிலும் மேலானதை வேண்டி நிற்கிறது. அதிகாரத்துவம், சோவிய தொழிலாள வர்க்கத்தின் ஆழமான எதிர்ப்பினை இரத்தம் தோய்ந்த எதிர் புரட்சி வழிமுறைகளின் மூலம் கட்டாயமாக நசுக்கியதாக வேண்டும். கோர்ப சேவின் கொள்கைகளுக்கு மக்களின் எதிர்ப்பு பற்றிய பரவலான செய்திக வந்துகொண்டிருக்கின்றன. உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துடமை மீண்டும் அறிமுகம் செய்வதை, சோவியத் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துட எதிர்பார்க்கிருர்கள், என்பதற்கான கண் புலனுகக் கூடிய அறி குறிகள் இல என்பதை முதலாளித்துவ பார்வையாளர்கள் கூட அங்கீகரிக்கும் வண்ண தள்ளப்பட்டிருக்கின்றனர். தனியார் வர்த்தகத்தை அங்கீகரிக்கும்-19 மே 1-ன் சட்ட சீர்திருத்தம் சம்பந்தமாக சார்பு ரீதியில் சிறிய அளவே பொ மக்கள் அக்கறை கொண்டதை 'வெளிவிவகாரத்துறை'' (Foreign Affair அச்சம் நிறைந்த அதிர்ச்சியுடன் வெளியிட்டுள்ளது. மாஸ்கோ, லெனின்கிரா —எங்குமாக சில டஜன் பேர் மட்டுமே தனியார் டாக்சிகளை ஓட்டுவதற்கா லைசென்சுகளைப் பெற்றுக் கொண்டனர். வெளி விவகாரத்துறை இதைப் பற் ''சோவியத் யூனியனில் இன்று அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவன களின் பால் குறைந்த தன்னியல்பான இயக்கமே இருக்கிறது. (பாகம் 6 எண். 3) எனக் கவலையுடன் உறுதிப்படுத்துகிறது

73. தனது எதிர்ப்புரட்சிகர பெரஸ்து ரொய்காவை அமல் செ முயலுகைலல், ஸ்டாலினிசம ஆதாரமாய்த் தங்கியிருந்த அனைத்து பொ ருளாதார அடிப்படைகளும—அதாவது தனியொரு நாட்டில் சோசலி நிர்மாணிக்கபபட முடியும் என்பது அடியோடு தகர்ந்துபோய் விட்ட கோர்பச்சேவ் ஒப்புக்கொள்வத தொக்கி நிற்கிறது. உண்மைய

படிப்பகம்

www.padippakam.com



# அனைத்துலகக் குழுவின்
# ன் தீர்மானம்

சோவியத் பொருளாதாரத்தின் நிஜ நெருக்கடியானது, உலகச் சந்தையின் ளங்களில் இருந்தும் சர்வதேச உழைப்புப்பகுப்பிலிருந்தும் வலுக்கட்டாய ாக தனிமைப்படுத்தப்பட்டதிலேயே வேரூன்றியுள்ளது. இந்த நெருக் டியைக் கையாளுவதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. கோர்பச் சவினுல் பிரேரிக்கப்பட்ட வழியானது, அரச தொழிற்துறையை நிர்மூல ாக்குதல், திட்டமிடல் கொள்கைகளை நிராகரித்தல், வெளிநாட்டு வர்த்த ந்தில் அரசின் ஏகபோகத்தைக் கைவிடல் ஆகியவற்றை உள்ளடக்கி இருக் றது. அதாவது சோவியத் யூனியனை உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் று இணைப்புச் செய்வதாகும்: இந்த எதிர்ப்புரட்சிகரத் தீர்வுக்கு பதிலீ ானது உலகப் பொருளாதாரத்தின் மீது ஏகாதிபத்திய ஆளுமையை ழிப்பதை வேண்டி நிற்கிறது. திட்டமிட்ட பொருளாதாரத்தினை ரோப்பிய, வட அமெரிக்க. ஆசிய முதலாளித்துவக் கோட்டைகளுக்கு சாவியத் மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஒரு புரட்சிகர திர்த்தாக்குதலினூடாக விஸ்தரிப்பதை இலக்காகக் கொண்டிருக்கிறது.

74. இந்த பதிலீடுகளது இணக்கம் காணமுடியாத குரோதம் நிறைந்த ண்பானது, சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று உந்துதல்களுக்கும் டாலினிச அதிகாரத்துவத்தின் முன் நோக்குகளுக்கும் இடையே ஆழமாய் வர் விட்டுள்ள சமூக முரண்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. அக்டோபர் புரட்சி ன்அடிப்படையான தேட்டங்கள் மீதான அதிகரித்துக்குவரும் தாக்குதல்கள், திகாரத்துவத்துக்கு எதிரானதொழிலாளர் வர்க்கத்தின்புரட்சிகரப் போராட் த்திற்கான களத்தினை தயார்செய்கின்றது. அண்மையில் போலந்திலும்யூகோ லாவியாவிலும் இடம்பெற்ற வேலைநிறுத்தங்கள் சோவியத்யூனியனில் வந்து காண்டிருப்பதாக எதிர்பார்க்கப்படும் ஒருமங்கல் வெளிச்சம்மட்டுமே.சோவியத் னியனில் போல்ஷேவிசத்தை அதன் இன்றைய வடிவான டிராட்ஸ்கிசத்தில் துப்பிப்பதற்கான புறநிலைமைகள் இன்று ஏற்பட்டுள்ளன.

75. அனைத்துலகக் குழுவானது, அதிகாரத்துவத்திற்குள் உள்ள நருக்கடிகளால் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பங்களை, மற்றும் கிளாஸ் நாஸ்தினுல் வழங்கப்பட்டவை தற்காலிகமானவையாக இருப்பினும் வை உள்ளடங்கலாக—சோவியத் பாட்டாளி வர்க்கத்தினரிடையே ரட்சிகர பணிகளை வளர்த்தெடுக்க— அவற்றைப் பயன்படுத்திக் காள்ளும். ஆனல் அந்தப்பணி எப்போதும ஸ்டாலினிசத்துக்கு திரான நீண்ட போராட்டத்தின் வரலாற்றுப் படிப்பினைகளின் டிப்படையில் மார்க்சிச நனவினை வளர்ச்சிபெறச் செய்யும விதத்தில் ழி நடத்தப்பட வேண்டும். பழம் போல்ஷேவிக்குகளின் புனருத் ாரணமும் மற்றும் மாஸ்கோ வழக்குகளின் நிராகரிப்பும் சோவியத் திகாரத்துவத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பான நான்காம் கிலத்தின கோட்பாட்டு ரீதியான நோக்கினையோ அல்லது கோர்பச்சேவ் ரிவினர்பால் கொண்ட எமது மதிப்பீட்டையோ மாற்றிவிடவில்லை. எந்த தத்திலும் இப்புனருத்தாரணத்திற்கான ' நற்சான்று''. சோசலிசத்திற் ன ஸ்டாலினின் ''பங்களிப்பை அக்டோபர் புரட்சியின் எழுபதாவது ண்டு விழாவில் இன்னமும் புகழ்ந்து கொண்டிருக்கும் கோர்பச்சேவுக்கு ல்லாமல், அதிகாரத்துவத்திற்குள் உள்ள நெருக்கடிகளுக்கு அடிப்படை ாக இருக்கும், திட்டமிட்ட பொருளாதாரத்தை ஓயாமல் பேணுதலையும், ம்யூனிச இலக்கினை அடைய சளைக்காத அர்பணிப்பையும் கொண்டுள்ள சாவியத் தொழிலாள வர்க்கத்துக்குப் போய்ச்சேர்கிறது. அதிகாரத் வத்தின் உள்ளேயான சகல பிரிவுகளிலிருந்து சோவியத் தொழிலாள ர்க்கத்தின் அரசியல் சுதந்தரத்தைக் காக்கவும், அரசியல் புரட்சியின் தாகைகை வழங்குகலும் உள்ளடங்கலாக போராடுவதே அனைத்துலகக் ழுவின் முதல பொறுப்பாகும்.



சீனவில் வேலையில்லாத இளைஞர்கள்—சீன ஸ்டாலினிஸ்டுகள் முதலாளித்துவத்தை வரவேற்கின்றனர்.

### சீனுவில் ஸ்டாலினிசம்

76. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினுல் ஆளப்படும் எல்லா நாடுகளி லும் தொழிலாள வர்க்கம் வென்றெடுத்த தேட்டங்களின் மிச்சசொச்சங் ளின் உயிர்வாழ்வு, இப் போராட்டத்தின் முடிவிலேயே தாங்கியுள்ளது, ழக்கு ஐரோப்பா முழுவதிலும், சீன, வியட்னும் மற்றும் லாவோஸிலும் அதிகாரத்துவங்கள், தங்களது தேசிய பொருளாதாரத்தை உலக முதலா ளித்துவ அமைப்பினுள் ஒருங்கிணைப்பதில்,சோவியத் யூனியனைக்காட்டிலும் திவேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வுப்போக்கு சீன ில் மிகவும் முன்னேறியுள்ளது. பொதுநலப் பார்வைக்காக மாவோவின் டலம் இன்னமும்கெடாது பேணப்பட்டிருக்கலாம், ஆனல் அவரது பாரம் ரியத்தின் அழுகல் நாற்றமோ உச்சகட்டத்தை எட்டியுள்ளது. அவரின் ாரிசுகள் திட்டமிட்ட பொருளாதாரத்தில எஞ்சியிருந்த அனைத்தையும் ழிக்கத் தொடங்கிவிட்டனர். 1949-ன் பின்னர் கூட்டுப்பண்ணைமுறைக் ன் கொண்டுவரப்பட்ட எல்லா நிலங்களும் தனியார் சொத்துடைமைக்கு ிருப்பப்பட்டுள்ளது, அத்துடன் ''செல்வந்தராவது மகத்துவமானது'' ன்ற அரசாங்க ஊக்குவிப்பின் கீழ், நாட்டுப்புறங்களில் முதலாளித்துவ றவுகள் செழித்து வந்து கொண்டிருக்கிறது. நகர்ப்புற மையங்களில் தலாளித்துவ நிறுவனங்கள் மீதான சகல கட்டுப்பாடுகளும் அடியோடு கற்றப்பட்டுள்ளதோடு, ஒரு காலத்தில அரசுடைமைத் தொழிற்துறை

யாக இருந்தனவற்றின் பெரும்பாகம் வெளிநாட்டு, தேசிய முதலாளிக்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றது 1000க்கும் அதிகமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும தனியார் தொழிற்சாலைகள் பல அங்கே உண்டு. 1988 ஜூனில் வெளியிடப்பட்ட புதிய விதிகள் முதலாளித்தவ நிறுவனங் களில் வேலைக்கு அமர்த்தக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கைபற்றிய சகல வரையறைகளையும் அகற்றியுள்ளது.

77. உலக ஏகாதிபத்தியத்தின் இந்த சீன ஸ்டாலினிச ஏஜெண்டுகள் சிறப்புப் பொருளாதார வலயங்களை (SEZ) ஸ்தாபித்துள்ளனர். அவர்கள் இவற்றினை, தொழிலாள வர்க்கத்தின்மீதான கட்டில்லாத சுரண்டலுக்காக வரவேற்கின்றனா. நாட்டின் பொருளாதாரத்தில், தாய்வான் மூலதனத் தின் வேகமாக விரிவடையும் பாத்திரம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்: 1987—ல் ஹாங்காங்கை ஒரு இடமாற்றப் புள்ளியாகக் கொண்ட, தைவானுக்கும் சீனவுக்கும் இடையிலான மறைமுக வர்த்தகம் 58% வளர்ச்சியினுல் 1.5 பில்லியன் டாலர் ஆகியுள்ளது! நாட்டின் உற்பத்தி யில் ஏற்கனவே 80-க்கும் அதிகமான தைவான் நாட்டுக் கம்பெனிகள் முதலீடு செய்துள்ளதோடு,200-க்கும் அதிகமானவை அந்தநடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

78. முதலாளித்துவத்திற்கான நல்வரவுப் பாய்விரிப்பானது மார்க்சிசத்தின் மீதான எல்லாவித முழு அளவிலான தாக்குதலுடனும இணைந்துள்ளது. இந்த அதிகாரத்துவம் கம்யூனிஸ்டு அறிக்கை வெளியிடப் பட்ட 150—ஆவது ஆண்டு நிறைவு விழாவினை, அதன் தவறெனப்படு பவற்றை கண்டிப்பதற்கான சந்தர்ப்பமாக்கிக் கொண்டது. ''முதலாளித் துவம் வீழ்ச்சியடைந்து சோலிசம் வந்து கொண்டிருக்கிறது என மார்க்சும எங்கெல்சும் தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டது தவறு, ஏனெனில் இது உண்மை நிகழ்வுகள் மூலம் ஊர்ஜிதமாகவில்லை'' என்று ஒரு முன்னணி பத்திரிகை சமீபத்தில் ஆட்சேபித்தது. இன்னும் முக்கியமான மற்றுமோர் அறிக்கை, ஸ்டாலினிஸ்டுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கை களின் உண்மைத்தன்மையை அம்பலமாக்குகிறது. ஒரு முன்னணி ''தத்துவவாதி'', அரசாங்கக் கொள்கை ''உழைப்புக்கும் மூலதனத்துக்கும் ஏறப லாபங்கள் பங்கிடப்படுவதை அனுமதிக்கின்றன'' என விளக்கினர். அது தொழிலாள வர்க்கத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப்பற்றி அந்த தத்துவவாதி கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் ''சுரண்டலை அனுமதிக் கிறது. ஆனல் சோலிச சுரண்டலை!'' என்றர்.

79. இந்த ''சோலிச சுரண்டலின்'' அர்த்தத்தை சீன ஸ்டாலினிச பத்திரிகையில் வெளியான ஒரு உண்மையின் மூலம் அறியலாம்: தனிப்பட்ட முதலாளித்துவ வேலை கொள்வோருக்காக (employes) வேலை செய்யும் பொருட்டு 30 லட்சம் குழந்தைகள் பாடசாலைகளில் இருந்து விலகி யுள்ளனர். வேலை கொள்வோர் ''குழந்தை உழைப்பைப் பயன்படுத்தி செல்வந்தர்'' ஆவதை பத்திரிகை ஒப்புக்கொள்கிறது. குழந்தைஉழைப்பின் வளர்ச்சியானது, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒரு உண்மையான வெளிப்பாடாகும். தொழிலாளர்கள் தமது ஊதியத்தில் துண்டு துணடான அதிகரிப்பினை மட்டும் பெற்றிருக்கும் வேளையில், பண வீக்கம் அதிகரித்து வருகின்றது 1988—ன் முதல் காலாண்டுப் பகுதிகளின் அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களின் விலை 24·7% ஆகவும் காய்கறிகள் விலை 48% ஆகவும் அதிகரித்துள்ளது.

80. பல தசாப்தங்களாக பப்லோவாதிகள் மாவோயிசத்தை டிராட்ஸ்கிசத்துக்கான ஒரு பதிலீடு எனப்புகழ்ந்தனர் 1952—க்குமுன்பே பப்லோ, மக்கள் குடியரசு நிறுவப்பட்டதன் பின்பு மாவோயிஸ்டுகளால சிறையில் தள்ளப்பட்டிருந்த சீன டிராட்ஸ்கியிஸ்டுகளின் மேல்முறையீடு களை பிரசுரிக்கவும் மறுத்து விட்டார். ஸ்டாலினிசம், முதலாளித்துவ தேசியவாதம, விவசாய தீவிரவாதம் ஆகியவற்றில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட மாவோவின கலவைக்கு எதிராக, உண்மையான ஒரு பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டைப பாதுகாக்கும் சீன டிராட்ஸ்கிஸ்டு களின் எதிர்ப்புப் போக்கினல், பப்லோவாதிகள் ஆத்திரமுற்று, அந்த உறுதியான மார்க்சிஸ்டுகளை ''புரட்சியின் அகதிகள்'' எனப் பகிரங்க மாகக் கணடித்தனர். 1954-ல் இலங்கை பப்லோவாதிகள்சீன வெளி நாட்டு அமைச்சர் சூ-என்-லாயை சந்தித்த பொழுது இந்த சிறை வைக்கப்படடிருந்த டிராட்ஸ்கிஸ்டுகளைப் பற்றிய பிரச்சினையை எழுப்ப மீண்டும் மறுத்தனர். மாவோயிசத்துக்கு அடிபணிந்த பப்லோவாதிகளின் வரலாற்றுத் தாக்கங்கள் இன்று ' மாபெரும் மாலுமியின்'' கொள்கை யினுல் முழுமனே அம்பலமாகியுள்ளது. முதலாளித்துவத்தை மீண்டும் வெறியுடன் அறிமுகம் செய்து வைக்கும சீன ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கைகள், நாட்டினைப் பொருளாதார அழிவினுள் தள்ளி வருவ தோடு, தவிர்க்க முடியாத வகையில பட்டாளி வர்க்கத்தின் பிரமமாண்ட மான எழுச்சிக்கு கட்டாயம் இட்டுச்செல்லும். அடுத்த புரட்சிகர எழுச்சியினபோது, நாட்டில், அதிகாரத்துவத்தினை ஒழித்துக்கட்டவும், ஸ்டாலினிசத்தால் முகாமிடப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தைத் வெற்றி கொள்ளவுமான பிரம்மாண்டமான போராட்டத்தில், ஏழை விவசாயிகளின் தலைமையை வகிப்பது சீனத்தொழிலாள வர்க்கமாகவே இருக்கும்.

### நிரந்தரப் புரட்சித் தத்துவம் ஊர்ஜிதம்

81. ஸ்டாலினிசத்திற்கும், மாவோயிசத்திற்குமான ''பப்லோவாதி களின் அடிபணிதலுடன் பின் தங்கிய நாடுகளில் தேசிய முதலாளித்துவ வர்க்கங்களுடன் அவர்கள் ஒத்துப்போவது ஒன்று சேர்ந்தது. அக்டோபர் புரட்சி, சீனப்புரட்சி (1925—1927) மற்றும் ஸ்பானியப் புரட்சியின் அத்தியாவசியமான வரலாற்றுப படிப்பினைகளுக்கு புறமுதுகு காட்டுவதன் மூலம் பப்லோவாதிகள் அல்ஜீரியாவின் பென்பெலலா மற்றும் அர்ஜென் டினவின் பெரோன் முதல் பர்மாவின் நெவின வரையிலான ஒவ்வொரு முதலாளித்துவ தேசிய தலைவர்களுக்கும் கூட கைதட்டும தலைவர்களாயி னர். தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து தொழிலாள வர்க்கத் தின் அரசியல் தந்திரத்திறகாகப் போராடுவதன் அவசியத்தை நிராகரித் தனர். பதிலாக நிரந்தரப்புரட்சி தத்துவத்தினைப் பொய்மைப்படுத்தினர்; பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரததுக்கான போராட்டத்துக்கு வழி காட்டும் ஒரு நனவாக மூலோபாயம் என்ற நிலையில் இருந்து, இத்தத்து வத்தின பாட்டாளி வர்க்கம் அல்லாத சக்திகளுக்கு தமது சொந்த அடி

★8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



பணிவினை நியாயப்படுத்தும் நிலைக்கு உருமாற்றினர். தொழிலாள வர்க்கத்தை சுதந்திரமாக அணி திரட்டுவதன்மூலம் நிரந்தரப் புரட்சித் திட்டத்தின் மூலோபாயத்திற்காகப் போராடுவதைக் காட்டிலும், பப்லோவாதிகள் அது நனவற்ற முறையிலாயினும் கேஸ்ட்ரோ, பென் பெல்லா, பெரன் போன்ற முதலாளித்துவ தேசிய வாதிகளினால் அடையப்பட்டுள்ளதாக மிக திருப்தியுடன் பிரகடனம் செய்தனர். மேலும் கேஸ்ட்ரா, பென்பெல்லா போன்ற ''நனவற்ற மார்க்சிஸ்டுகள்,' "தொழிலாளர் அரசுகளை" ஸ்தாபிப்பதில் வெற்றி கண்டுள்ளதாகக் கருதப்படுவதால், பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வர தனது சொந்த புரட்சிக் கட்சியைக் கொண்டிருக்க வேண்டியதில்லை என பிரகடனம் செய்தனர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சம்பந்தமாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மற்றும் டிராட்ஸ்கி எழுதிய அனைத்தையும்— சிறப்பாக ஆட்சியின் புதிய வடிவமாக தொழிலாள வர்க்கத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட சோவியத்துக்களின் உலக முக்கியத்துவத்தை— புறக்கணித்து விட்டு பப்லோவாதிகள், ஒரு தொழிலாளர் அரசு உருவாகி விட்டதா இல்லையா என்பதை தீர்மானம் செய்வதற்கு தொழிலாளர் ஆட்சியின் சுதந்திரமான வடிவங்களின் தோற்றம் ஒரு அத்தியாவசியமான அளவீடு ஆகாது என வாதிட்டனர்.

82. 1963—ஆம் ஆண்டின் மறு இணைப்பிற்கான மாநாடு, பின் தங்கிய நாடுகளில் நான்காம் அகிலத்தின் பகுதிகளை கட்டி எழுப்பும் வரலாற்றுத் தேவையை நிராகரிக்கும் வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்தக் காங்கிரசில் பப்லோவாதிகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம பிரகடனம் செய்வதாவது: ''மூலாதாரம் வரை அழுகிப்போய், பரந்த மக்களின் ஆதரவினை இழந்துபோயுள்ள ஆளும் வர்க்கங்களால் எதிர்கொள்கையில் புரட்சியானது ஏழை விவசாயிகள், திவாலாகி விட்ட குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் உட்பட பரந்த உழைக்கும் மக்கள் தொகையைப் போராட்டத்தினுள் ஈர்க்கின்றது. இதன்மூலம் பாரம்பரிய ஒழுங்கையும், அதன் அரசினையும் சீர்குலைவுக்குக் கொண்டு வருகிறது. அத்தகைய அழுத்தங்களை இடைநிலைவாத தொழிலாள வர்க்கக்கட்சிகள் மற்றும் அத்த போன்ற அமைப்புக்கள் மீது செலுத்துவதன் மூலம் அவற்றை ஆட்சிக்குக் கொணரச் செய்கிறது... பின் தங்கிய நாடுகளில் எதிரியின் பலவீனங்கள் மொட்டை ஆயுதத்துடனும் கூட ஆட்சிக்கு வருவதற்கான சாத்தியக்கூறைத் திறந்து விட்டிருக்கிறது,''



சிலியில் ஆட்சிக் கவிழ்ப்புசதி, செப்டம்பர் 1973

83.- புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்தினைக் கைவிடுவதானது, சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினையே நிராகரிப்பதாகும். இவ்வாறாக பாட்டாளி வர்க்கத்திற்கு மாற்றுக்களை தேடலானது. மறுஇணைப்புத் தீர்மானத்தில் வெளியிட்டது: ''இந்நாடுகளின் தனித்துவமான சமூக பொருளாதார தோற்றத்தில் பாட்டாளி வர்க்கததின் பிரதான பலம் தொழில் துறை நிறுவனங்களின் தொழிலாளர்களிடையே இருக்கவில்லை இவர்கள் அர்ஜென்டினாவைத் தவிர இந்நாடுகளின் சுறுசுறுப்பான மக்கள் தொகையில் ஒரு இம்மி அளவு சிறிவினரையும் கூலி பெறுபவர்களில் சிறுபகுதியினரையும் மட்டுமே கொண்டுள்ளனர்... கரங்கதொழிலாளர் பெருந்தோட்ட விவசாயத் தொழிலாளர் மற்றும் பேரளவில் வேலையற்றோர் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்... கெரில்லாப்படைகளை விரிவுபடுத்தும் வகையில் விவசாயிகள் சந்தேகத்திற்கிடமில்லாமல், மார்க்சிச கோட்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டதைவிட, மிகவும் மேன்மையான தீவிரமான மற்றும தீர்க்கமான பாத்திரத்தினை காலனித்துவப் புரட்சியில் ஆற்றியுள்ளனர்.''

84. கொரில்லா வாதத்தினைப் புகழ்வது பொலிவிய பப்லோவாத மொஸ்கோசாவினால் உச்சரிக்கப்பட்டதாவது: ''கியூபானியர்களால் முன்வைக்கப்பட்ட கெரில்லா முறையானது, ஒவ்வொரு நாட்டினதும் சிறப்புத் தன்மைக்கு ஏற்றவாறு வடிவத்தில் வேறுபட வேண்டியிருப்பினும, சகல பின் தங்கிய நாடுகளிலும பிரயோகிகத்தக்கதாகும். தீர்வுகாணப்படாத நிலப்பிரச்சினைகளைக் கொண்ட பரந்த அளவிலான விவசாயிகளைக் கொண்ட அந்நாடுகளில, கெரில்லாக்கள் விவசாயிகளிடமிருந்து தமது பலத்தினைப் பெறுவர்; கெரில்லாப போராட்டம் இம்மக்களைக் கியூபாவில சியர்ராமேஸ்ட்ராவிலிருந்து தொடங்கியது போல் ஆயுதமும் கையுமாக தமது விவசாயப் பிரச்சினையைந் தீர்க்க நடவடிக்கையில் ஈடுபடுத்தும. ஆனால் மற்ற நாடுகளில பட்டாளி வர்க்கமும் தகர்ப்புற தீவிரவாத குட்டி முதலாளித்துவ வர்க்கமும் கெரில்லா படைகளுக்கு ஆட்களை வழங்கும்'' (ஏர்னஸ்ட் மெண்டெல், ஆசிரியர், உலகப்புரட்சியின் ஐம்பதாண்டுகள் (நியூயார்க்: பாதபைண்டர் அச்சகம், 1970) பக்கம் 194–195) அன்று சிலி தொழிலாளர்களின எதிர்காலத் தோல்விக்கான தயாரிப்பு செய்து கொண்டிருந்த மொஸ்கோசாவ்வை சகாவான மண்டெல் கெரில்லா யுத்தத்தின் அளவு கடந்த முக்கியத்துவத்தைத் தம்பட்டமடித்து, 'இந்தப் புதிய ஆயுதக்கிளர்ச்சி மூலோபாயத்தை தொடக்கி வைத்த பெருமை மாவோசேதுங்குக்கும் சினக்கம் யூனிஸ்ட் கட்சிக்குமே உரியது என்பதில் கேள்விக்கே இடமில்லை.'' (அதே நூல் பக்கம் 46) எனக்கூறினார்.

85. பப்லோவாதிகளின் அரசியல்குற்றங்களின் பரிமாணத்தினை முழுமனே புரிந்து கொள்ள கெரில்லா மூலோபாயத்தின் பலாபலன்கள் பற்றிய ஒரு இருப்பு நிலைக்குறிப்பை (Balance Sheet) வரைய வேண்டியிருக்கும். சிலி, உருகுவே, பொலிவியா, அர்ஜெண்டினா முதலான நாடுகளில் கெரில்லாவாதத்தினை புகழ்ந்து பாராட்டுவதன் மூலம் பப்லோவாதிகள் பாட்டாளி வர்க்கத்திலிருந்து புரட்சிகர சக்திகளை தனிமைப்படுத்தினர் தொழிலாள வர்க்கத்துள் புரட்சிக்கட்சியின் அபிவிருத்தியைத் தடை செய்தனர்; பெரும் தோல்விகளுக்கு பங்களிப்பு செய்தனர்.

86. நிரந்தரப்புரட்சிக் கோட்பாட்டினைக் காட்டிக் கொடுத்த இப்பயணத்தல், பப்லோவாதிகள் அனைத்துலகப் பட்டாளி வர்க்க நிலைப்பாட்டினை முழுமனே கைவிட்டதுடன், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்திற்கெதிரான தொழிலாள வர்க்கததின் போராட்டத்தின் வேர்களினின்று, சோசலிசத்தின் வரலாற்று முன்னேற்றத்தினைத் தனிமைப்படுத்தினர். பப்லோவாதிகள் தமது சந்தர்ப்பவாதப் போக்கினை அமுல் செய்யும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகளின் பழைய, செல்வாக்கிழந்த ''இரண்டு கட்ட'' கோட்பாட்டுக்கு புத்துயிரூட்டினர். பல தசாபதங்களாக கிரெம்ளின் அதிகாரத்துவம் இக்கோட்பாட்டின்மூலமே சோசலிசப் புரட்சிக்கான முன் முயற்சி ஜனநாயகப் புரட்சி நிறைவேற்றப்படும் வரை தாமதப்படுத்தப்பட வேண்டும் எனக்கூறி பாட்டாளி வர்க்கத்தினை பல்வேறு முதலாளித்துவ தேசிய தலைவர்களுக்குக் கீழ்ப்படுத்தின

87 தேசிய முதலாளித்துவத்திற்கு தமது அடிபணிவினை நியாயப்படுத்திக் கொண்டிருந்த அதே வேளையில், பப்லோவாதிகள் தமது மறு இணைப்பிற்கான காங்கிரசில், பின் தங்கிய நாடுகளில் புரட்சித்தலைமைக்கான நெருக்கடி உண்மையில் நிலவவில்லை அல்லது குறைந்த பட்ச அற்ப அளவில் தானும் இல்லையெனவும் குறிப்பிட்டனர். ''காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவத்திற்குரிய பலவீனமானது ஏகாதிபத்தியததினால் உருவாக்கப்பட்ட பிரத்தியேகமான சமூக–பொருளாதார முழு அடிப்படையும் ஆகும். ஒரு தீவிரமான விவசாயப் புரட்சி இல்லாமையால் சனத்தொகையில் பெரும்பகுதியினரின் நீடித்த அவலங்களும், தொழில் மயமாக்கல் சார்புரீதியில் துரிதமாக முன்னேறிய போதிலும் வாழ்க்கைத் தரத்தல் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஒரு புரட்சிகர அலை இல்லாமல் தன்னியக்கமாகவே சார்புரீதியான அல்லது தற்காலிகமான அளவில்கூட சமூக அல்லது பொருளாதார உறுதிப்பாட்டுக்கான நிலைமையை உருவாக்கி விடாது. பொலிவியா 10 ஆண்டுகளாகப் பெற்றிருக்கின்ற அனுபவங்களைப் போன்று, ஒரு ஓய்ந்து போகாத வெற்றியளிப்பதாகக் காணப்படுகின்ற பரந்துபட்ட மக்கள் போராட்டம் தொடர்கின்றது'' கடந்த கால் நூற்றாண்டின் துன்பகரமான அனுபவங்கள் — இந்தோனேஷியா, சிலி, பொலிவியா, அர்ஜெண்டினா, சூடான்—தோல்விகள் (பெயர் குறிப்பிட சிலமட்டுமே) இன்னும் இந்த சந்தர்ப்பவாத உதாசீனத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன!

88. பல ஆண்டுகளாக பப்லோவாதிகள் தமது கொள்கை நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது எனகூறிவந்தனர். ஆனால் 1982–ல் பப்லோவாதத்தின் பிடிவாதமான தாக்கத்தினைத் தொடர்ந்து சோசலசத் தொழிலாளர் கட்சி டிராட்ஸ்கியைக் கண்டனம செய்தது. சோலிசத் தொழிலாளர் கட்சி தனது சகோதரக் கட்சிகளாக வரவேற்றுக் கொண்டுள்ள கிரனெடா ''நியூஜுவல் மூவ்மெண்ட்'' (New Jewel Movement). நிகரகுவா சான்டினிஸ்டா போன்ற குட்டி முதலாளித்துவ இயக்கங்களைக் கொண்ட ஒரு புதிய ''பரந்த லெனினிச அகிலத்தின்'' அபிவிருத்திக்கு நிரந்தரப்புரட்சி கோட்பாடு ஒருதடையாக இருப்பதாக பிரகடனம் செய்தது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டைக் கைவிட்டதோடு சோசலிச தொழிலாளர் கட்சியானது, 1917—ல் போல்ஷேவிக்குகளால் கைவிடபட்டு, 1920—களில் சியாங்கேஷேக்குடனான தனது நாசகரமான கூட்டினை நியாயப்படுத்தும் பொருட்டு, ஸ்டாலினால் புத்துயிரூட்டப்பட்ட "தொழிலாளர் விவசாயிகளது ஜனநாயகச் சர்வாதிகாரம" என்ற பழம் கருத்துருவினை புனருத்தாரணம செய்துள்ளனர். டிராட்ஸ்கிசம் மீதான இந்த தாக்குதலின் அர்த்தமானது, தென் ஆப்பிரிக்க பட்டாளி வர்க்கம் முதலாளித்துவ ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் அரசியல ஆளுமைக்கு நிபந்தனையின்றி அடிபணிய வேண்டுமென சோலிசத தொழிலாளர் கட்சி தீவிரமாக வற்புறுத்தியதன் மூலம் நன்கு துல்லியமாகத் தெளிவாகியுள்ளது.

89. தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் பப்லோவாதிகளின் இழிவான அடிபணிவு—சாராமசத்தில் இரண்டாம் உலகபோருக்குப் பின் பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அச்சுறுத்தலைத் திசை திருப்பும் பொருட்டு, ஏகாதிபத்தியம் அந்த சக்திகளின் பால் ஒத்துப்போகும் நிலைக்குத திரும்பியதையே பிரதிநிதித்துவம் செய்கிறது. இரண்டாம் உலகப்போரினைத் தொடர்ந்து ஆசியா, மத்தியகிழக்கு, ஆபிரிக்கா முழுமையாகவும உள்ள அரசுகளுக்கு ஏகாதிபத்தியத்தினால் போலிச் சுதந்திரம வழங்கப்பட்டது. ஆனால 40 ஆண்டுகளின் பின்னரும இந்தப் ''புதிய சுதந்திர அரசுகளில'' அடிப்படை ஜனநாயகப் பணிகள் எதுவுமே வெற்றிகரமாக அமுல் செய்யப்படவில்லை. ஸ்டாலினிசத்தின் சீரழிவுடன் சேர்ந்து, பின்தங்கிய நாடுகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் திருப்தி செய்யமுடியாத முதலாளித்துவ தேசிய வாதத்தின் தோல்வி, சோசலிசத்தை அடைவது என்பது தனியாக ஒருபுறமிக்க, சர்வதேச பாட்டாளி வர்க்கததின் உள்ளே மார்க்சிசத்தின் அபிவிருத்தியைத் தடைசெய்ய குட்டி முதலாளிதது தத்துவவாதிகளால், சிறப்பாக பப்லோவாதிகளால் முன்வைக்கப்பட்ட எல்லா மூல்கைளுக்கும் மேலாக டிராட்ஸ்கிசத்தின் பூரண தத்துவார்த்த வெற்றியைப் பறைசாற்றுகின்றது.

90. 1947-ல் இந்தியா துண்டாடப்பட்டது; தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியததுடன கூட்டமைதது ஜனநாயக தேசியபோராட்டத்தின் கழுத்தினை நெரித்ததுடன் அடையாளமாயிற்று. இந்தப் பாணி அதனையே மீண்டும் மீண்டும ஆட்டம் பெறச் செய்தது. ஆயுதப் போராட்டத்தின் தலையீட்டின் நேரடி காலனித்துவ ஆட்சி முடிவுற்ற அங்கெலலாம, தேசிய முதலாளித்துவத்தினால காலனித்துவத்தின் கசப்பான மரபுகளையும பொருளாதாரப் பின்னடைவுகளையும இலலாமற் செய்ய முடியவில்லை. குறைநத ஏகாதிபத்

★9ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்குகளின் தீர்மானம்

தியத்தின் பொருளாதாரக் குரல்வளை விடுபட முடியாத வகையில் நெரிக்கப் பட்டுக்கொண்டிருப்பதானது, குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் என்ற ழைக்கப்படும் நாடுகளின் தப்பவியலாத கடன்பளுவில் இருப்பதில் காண முடிகிறது. பின்தங்கிய நாடுகளின் மக்கள் தொகையின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு மாருக, இன, மொழி. மற்றும் மதரீதியான குரோதங்கள் திட்டமிட்டு வேண்டுமென்றே தூண்டிவிடப்படுகின்றன. சுயநிர்ணய உரிமை மறுப்பின் வெளிப்பாடே இனவாதம், படுகொலைக்கான ஏற்பாடுகள் மற்றும் அரச ஒடுக்கு முறைகளாகும்.

91. பப்லோவாதிகள் சுயாதீனமான பாட்டாளி வர்க்கப் புரட்சித் தலைமையின் அபிவிருத்தியை இடைவிடாது எதிர்த்து வந்த வேளையில், தேசிய முதலாளித்துவம் தமது சொந்த நலன்களை பலப்படுத்திக்கொள்ள, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் பரந்த மக்களின் தியாகங்களை சுரண்டிக் கொண்டது. இதுவே அல்ஜீரியா, பங்களாதேஷ், சிம்பாப்வே, மொசாம்பிக் போராட்டங்களில் வெளிப்பட்டது என்பதை எடுத்துக் கூறுவதற்கான சில உதாரணங்கள் மட்டுமே ஆகும் ஈரானில் முதலாளித்துவ வர்க்கம், ஈராக்குடன் சகோதரர்களைக் கொல்லும் மரணயுத்தத்திற்கு புரட்சியினை இட்டுச்சென்றமை, பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கரத்தை வலுப்படுத்தியது.

92. மிக அண்மைக்காலத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு உறுதியான போராட்டத்தினை நடத்தும் தேசிய முதலாளித்துவத்தின் இயல்பான இயலாமையானது, பி. எல். ஓ, தமிழ் புலிகள் மற்றும் நிகராகுவாவின் சாண்டினிஸ்டாக்களால் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டது. பாலஸ்தீனிய சுயநிர்ணயத்திற்கு எதிரான மிகக் கசப்பான எதிரியான, பிற்போக்கு அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் முந்தானையில் முடிச்சுப்போடடுக் கொண்டுள்ள பி. எல் ஓ ஆனது, காசா மற்றும் மேற்குக்கரையில் உள்ள இளைஞர்கள், தொழிலாளர்களது இயக்கத்தை பாலஸ்தீன முதலாளித்துவம் ஏற்றுக் கொள்ளும் வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்க முயன்றது. அரபாத்தின் கொள்கைகள் தேசிய இயக்கத்தினை மத்திய கிழக்கின் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து திட்டமிட்டு தனிமைப்படுத்தி வைக்கிறது.

93. சிறிலங்காவில் தமிழ்குட்டி முதலாளித்து வர்க்கத்தின் மிகவும் தீவிரப்பிரிவினராக பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் புலிகள். சுயநிர்ணய உரிமைக்கான ஒரு உறுதியான போராட்டத்தினை கொண்டு நடந்த தகுதியற்றதாக உள்ளனர். புலிகளின அரசியல், இந்திய முதலாளித்துவத்தின் மீதான அவர்களுடைய ஆபத்து நிறைந்த பிரமைகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது இது இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் அங்கீகரித்ததன் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்ததோடு தமிழ்மக்களை இன்றைய இக்கட்டான நிலைக்கு இட்டுச்சென்றது. புலிகள் இந்திய இராணுவத்தால் வேட்டையாடப்படும் இன்றைய நிலையிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ராஜீவ்காந்தி மீதான நம்பிக்கையை இன்னும் பிரகடனப்படுத்துவதுடன், இந்தியப் பாட்டாளி வர்க்கத்திற்கு புறமுதுகுகாட்டி வருகின்றனர். எல். டி. டி. இன் குட்டிமுதலாளித்துவத்தன்மையின் பிரதிவிளைவுகள், இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் மூலோபாய நலன்களைப் பேணுவதில் அவர்களை மிகத்தெளிவாய் படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடானது, அதன் மத்திய குழு உறுப்பினரான திலகரால் கொடுக்கப்பட்ட பேச்சினில் சுருக்கமாகக் கூறப்பட்டது. அவர் பிரகடனப்படுத்தியதாவது: ''எமது விடுதலை இயக்கம் இந்தியாவின் நலன்களுக்கு எதிரானது அல்ல. தெற்காசியாவின் பிராந்திய வல்லரசு என்றமுறையில் அதன் அந்தஸ்தினை நிலைநாட்டும் இந்தியாவின் மூலோபாய அபிலாசைகளுக்கு நாம் எவ்விதத்திலும் எதிரானவர்கள் அல்லர். நாம் எப்போதும் இந்தியாவின் நேசசக்தியாக இயங்கி வந்துள்ளோம். அவ்வாறே தொடர்ந்தும் இயங்குவோம். உடன்படிக்கை இந்தியாவின் புவி இயல்—அரசியல் நலன்களை ஈட்டிக் கொள்வதில் இலக்காகக் கொண்ட இந்திய—இலங்கை உறவுகளின் வரையறைக்குள் நின்று கொண்டிருப்பின், நாம் எமது நிபந்தனையற்ற ஆதரவை இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு வழங்குவோம்.''

94. இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் புவியியல் — அரசியல் நலன்களுக்கு தமிழ்புலிகள் சாஸ்டாங்கமாக வீழ்ந்து கும்பிடுபோடும்பாணி ஏரியஸ் திட்டம் நிகராகுவா சாண்டிஸ்டாக்களால் அங்கீகரிக்கப்படுவதில் எதிரொலித்தது. அது மத்திய அமெரிக்காவில் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தினை ஊர்ஜிதம் செய்யும் அரசவடிவங்களின் மீறத்தகாத தன்மையை ஏற்கின்றது. சாண்டினிஸ்டாக்களின் வரலாறும் பரிணாமமும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு பப்லோவாத அடிபணிவினை அடித்து நிரூபித்துள்ளது. ஆட்சிக்கு வந்த ஒரு தசாப்தத்தின் பின்னர், சாண்டினிஸ்டாக்கள் ஜனநாயகப் புரட்சியின் எந்தவிதமான அடிப்படைப் பணிகளையும் செய்ய தவறிவிட்டனர். நிலச்சீர்திருத்தம் சம்பந்தமான விரிவான வேலைத்திட்டம் எதுவுமே கிடையாது நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பாகம் இன்னமும் தனியார் உடைமையாக இருக்கையில் சோலிசத் தொழிலாளர் கட்சி (Swp) நிகராகுவா ஒரு தொழிலாளர் அரசு என பிரகடனம் செய்கின்றது. இந்த உடன்படிக்கை கைச்சாற்றிடப்பட்டதன் பின்னர், சாண்டினிஸ்டாக்கள் தொழிலாளர் வர்க்க வேலை நிறுத்தங்களை நசுக்குகையில், மானகுவாவில் காண்ட்ராகலகக்காரர்களை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். உண்மையில் கண்ட்ரா தலைவர்களுடன் —இவர்களில் பலர் ஒருகாலத்தில் சாண்டினிஸ்டா முன்னணியில் இருந்தவர்கள் — உறவுகள் புதுப்பிக்கப்பட்டதானது தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் தீவிரவாத குட்டி முதலாளித்துவ ஜனநாயகப் பிரிவினர் கூட தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான இயக்கத்தினை எதிர்கொள்ளும் தருணத்தில் மிகவும் பிற்போக்கான முதலாளித்துவ வர்க்கப் பிரிவினருடன் கூட்டுச்சேர தயாராய் உள்ளமையை அம்பலப்படுத்துகின்றது.

95. அமெரிக்காவில் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட வொர்க்கர்ஸ்லீக் — அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆத்திரமூட்டலுக்கு எதிராக நிகராகுவாவை சமரசத்திற்கு இடம் கொடாதவகையில் பேணிவந்துள்ளது. உலக ஏகாதிபத்தியத்தின் மையத்தில் தனது தினசரி வேலைகளை நடத்துகின்ற ஒருகட்சி என்ற முறையில் அனைத்து ஒடுக்கப்படும் தேசங்களதும், சிறப்பாக யாங்கி ஏகாதிபத்தியத்துடன் நேரடியான கடும் மோதலுக்கு ஆளாகியுள்ள லத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளின் நலன்களைக்காக்கும் ஒருவிசேட பொறுப்பு வொர்க்கர்ஸ்லீக்கின் தோளில் விழுகின்றது. மேலும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுடனான பாட்டாளிவர்க்க ஐக்கியத்திற்கான போராட்டம் அமெரிக்கத்தொழிலாள வர்க்கத்தினுள்ளே புரட்சிகர வர்க்க நனவினை வளர்த்தெடுப்பதற்கான ஒரு தீர்க்கமான அங்கமாக விளங்குகிறது — அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளினால் இழைக்கப்படும் ஒவ்வொரு ஏகாதிபத்திய காட்டுமிராண்டித்தனத்தையும் வெறுத்தொதுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும் ஏகாதிபத்திய அடிமைத்தனக்கு முற்றுப்புள்ளிவைக்கும் ஒடுக்கப்படும் நாடுகளை நிபந்தனையின்றி பேணுகையில் வொர்க்கர்ஸ்லீக்கோ அல்லது அனைத்துலகக்குழுவின் எந்த ஒருபகுதியோ அவற்றின் முதலாளித்துவத் தலைவர்களின் வேலைத்திட்டத்தினை அங்கீகரிக்கக் கடமைப்பட்டவை அல்ல உண்மையில் எண்ணற்ற கசப்பான அனுபவங்கள், பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் ஜனநாயகப்புரட்சியின் வெற்றி சாத்தியமாகும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

96 உலக சோசலிசப்புரட்சி மூலோபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒருகட்சி என்ற முறையில் அனைத்துலக்குழு தனியொரு வர்க்க நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கிறது. தேசிய முதலாளித்துவத்தின் எந்த ஒரு பிரிவினரின் கீழும் தொழிலாள வர்க்கத்தைக் கீழ்ப்படுத்துவதை நியாயப்படுத்தும் ''விதிவிலக்கான நிலைமைகள்'' எந்தவொரு நாட்டிலும் இருக்கப்போவதில்லை; இருக்கவும் முடியாது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல்நான்கு காங்கிரஸ்களின் காலப்பகுதியில் (1919—22) பலநாடுகளின் இன்னமும் முதலாளித்துவ உறவுகள் அரிதாகவே வளர்ச்சி கண்டிருந்ததோடு, அதில் பாட்டாளி வர்க்கம் மக்கள் தொகையில் புறக்கணிக்கக் கூடிய தொகையினரையே கொண்டிருந்தபோது, லெனின் முதிர்ச்சியடையாத பாட்டாளி வர்க்கத்தினரிடையேயும்கூட அதன் சுதந்திரமான நலன்பற்றிய நனவினை விருத்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர் ஏறத்தாழ 70 ஆண்டுகளின் பின்னர் ஒவ்வொரு கண்டத்திலும் ஏற்பட்டுள்ள முதலாளித்துவ உறவுகளின் பிரமாண்டமான வளர்ச்சிகளுக்கிடையே சகல ஒடுக்கப்படும் நாடுகளிலும் தேசிய முதலாளித்துவ வர்க்கம் அழுகி நாற்றமெடுத்ததை நிரூபித்த பரந்த வரலாற்று அனுபவங்களுக்கு இடையே, தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் இருந்து செய்யும் பின்வாங்கல்கள் அதனை நிராயுதபாணியாக்கவும் தோல்விகளைத் தயார் செய்வதற்கும் மட்டுமே உதவும்.

97. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (WRP) குத்துக்கரணம் நிரூபித்தது போன்று மத்திய கிழக்கில் தொழிலாள வர்க்க நலன்கள் காட்டிக் கொடுக்கப்பட்டமையானது, விடாப்பிடியான முறையில் பிரிட்டனிலேயே முதலாளித்துவ வர்க்கத்திற்கு சரணாகதி அடைவதற்கு இட்டுச்சென்றது.



இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள்

லிபியாவின் கடாபியுடனும், ஈராக்கில் சதாம்ஹுசைனுடனும் வைத்துக் கொண்டிருந்த கொள்கையற்ற கூட்டுகள் உலக ஏகாதிபத்தியத்தின் அடிப்படை நலன்களுக்கே சேவகம் செய்தன. ஏகாதிபத்தியம் இந்த அல்லது அந்த ஆட்சியாளர்களுடன் என்னதான் முரண்பாடுகளைக் கொண்டிருப்பினும், பின்தங்கிய நாடுகளில் அதற்கு முக்கிய அச்சுறுத்தலாக விளங்கும் புரட்சிகர தொழிலாள வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இன்னமும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்திலேயே தங்கி உள்ளது.

98. அனைத்துலகக்குழுவும் அதன் பகுதிகளும் இப்பூகோளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அனைத்துப் போராட்டங்களிலும் சர்வதேச புரட்சிகர வர்க்கமான தொழிலாளவர்க்கத்தின் வரலாற்று நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அவை எல்லாவித நிலைமையின் கீழும் ஏகாதிபத்தியத்தின் அனைத்து அரசியல் ஏஜென்சிகளிடம் இருந்தும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுகின்றன.

அனைத்துலகக் குழுவின் பிளவு

99. 1985-ல் இருந்து அனைத்துலகக்குழு, பிரித்தானிய டிராட்ஸ்கிசஇயக்கத்தின் மாஜி தலைவர்களான ஓடுகாலிகள் ஹீலி, பண்டா, சுலோட்டருக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் வரலாற்று முக்கியத்தும் இங்கு தான் தங்கியுள்ளது தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் (WRP) ஏற்பட்ட பிளவானது, பப்லோவாத சந்தர்ப்ப வாதத்துக்கு எதிரான அனைத்துலகக்குழுவின் புதுப்பிக்கப்பட்ட போராட்டத்தினை பிரகடனம் செய்தது. இதன் மூலம் நான்காம் அகிலத்தின் உள்ளே 1951—ஆம்ஆண்டின் மூன்றும் காங்கிரசுடன் ஆரம்பமாகி நீண்டுவந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தது.

100. 1963—ஆம்ஆண்டின் மறுஇணைப்பிற்கு எதிராகவும் அனைத்துலகக் குழுவினைப்பேணவும் சோசலிச லேபர்லீக் (1973-ல் தொழிலாளர் புரட்சிக்கட்சி (WRP) எனப்பெயர் மாற்றப்பட்டது.) தலைமை தாங்கிய போராட்டத்துக்கு இடையே SLL/WRP இன் அரசியல் போக்கு 1960 களின் கடைப்பகுதியில் இருந்து பெரிதும் தேசியவாத, சந்தர்ப்பவாதப் பண்பினை எடுத்தது. பப்லோவாதத்துக்கு எதிரான அனைத்துலகக்குழுவின் போராட்டத்தில் இருந்து பின்வாங்கியSLL/WRP, அனைத்துலகக்குழுவினை அமைப்பதனை பிரிட்டனில்புரட்சிகட்சியை கட்டுவதற்கு துணையானதாக நோக்கிற்று .எப்போதும் தேசியப்பணிகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டதாக, திட்டவட்டமான தேசிய அழுத்தங்களுக்கு சந்தர்ப்பவாத அடிபணிவினை பிரதிபலித்தது. 1968— மே—ஜூன் சம்பவங்களின் முக்கியத்துவம், அவை பிரிட்டனின் வேலையில் ஏற்படுத்தும் நடைமுறைத் தாக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டதே அன்றி (அதாவது ஒருதினசரிப்பத்திரிகையை ஸ்தாபிதம்செய்தல்) தொழிலாள இயக்கத்தில் உள்ள எல்லாவித போக்குகளுக்கும் வகித்த பாத்திரங்களை முழுமையாக ஆய்வு செய்யக்கோரும் அனைத்துலகப்பட்டாளி வர்க்கத்தின் ஒரு மூலோபாய அனுபவமாக மதிப்பிடப்பட்டவில்லை.

★10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்....

101. இந்தப்பின்வாங்கல் எஸ்.எல்.எல். (SLL) தலைமையின் உள்ளேயான பப்லோவாதப் போக்குகளின் அபிவிருத்தியுடன் பிணைந்துகிடந்தது. 1967-அளவில்பண்டா, ஹோ—சி. மின்-ஐ லெனினின் அரசியல்மறுபிறப்புஎன பாராட்டியும்சீனுவில் செங்காவலர் (REDGUARD) இயக்கத்துக்கு நிபந்தனையற்றஆதரவு வழங்கியும், நாசரின் முதலாளித்துவ தேசியவாத ஆட்சிக்கு எகிப்திய தொழிலாளவர்க்கத்தை அடிபணியக்கோரியும் வந்தார். டிராட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகள் மீதான தாக்குதல்களை எதிர்கொள்வதற்குப் பதிலாக ஹீலியும், சுலோட்டரும் புரட்சிகர இயக்கத்தின் வேலைத்திட்டம் பற்றிய பிரச்சனைகள் சிறியஅளவு முக்கியத்துவம் கொண்டவை என்ற நிலைப்பாட்டை அபிவிருத்தி செய்தனர். எஸ் எல் எல் /டபிள்யூ ஆர். பி. தலைவர்களின்படி டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதைவிட ''பிரச்சார வாதத்துக்கும்'' ''கருத்தியல் சிந்தனைமுறைகளுக்கும்'' எதிராகப் போராடுவதே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

102. 1971—ஐ, தொடர்ந்து எஸ்.எல்.எல்.-/டபிள்யூ. ஆர்.பி. தலைவர்களால் அதிகரித்த கர்ண கடூரத்துடன் முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்துருவின் முக்கியமான உள்ளடக்கம்— நான்காம் அகிலத்தை எதிர்கொண்டுள்ள ஆபத்து அரசியல் தனிமைப்படுத்தலாக இருந்தது என்பதாகும். மேலும் ஹீலி, பண்டா, சுலோட்டர் ஆகியோர் டிராட்ஸ்கிச அடிப்படையில் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றலே இந்த தனிமைப்படுத்தலுக்கான காரணம் என்றனர். அது ''கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் உள்ள ஐக்கியத்தினை உண்மையாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு தடைக்கல்லாக இருப்பதாக'' அவர்கள் தெரிவித்தனர். அது ''ஒரு பிரச்சாரவாத வாழ்வை நியாயப்படுத்தியது''. அது ''ஒரு போதும் உண்மையான புரட்சிகர நடைமுறைக்கான வழிகாட்டுதலாக அழைக்கப்படவில்லை,'' பதிலாக அது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் வர்க்கப்போராட்ட இயக்கத்தை புரிந்து கொள்வதற்குத் தடையான, மாற்றத்திற்கான தடையான போலி ஒப்பந்த முடுதிரையை இப்பொழுது வழங்குகிறது'' என்றனர்.



ஹீலி,



பண்டா

103. நான்காம் அகிலம் எதிர்கொள்ளும் பேரபாயம் தனிமைப்படல் என்ற நிலைப்பாடானது, நான்காம் அகிலத்தினுடைய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டதுடன் துண்டிப்பது அவசியம் என்றமுடிவிற்கு இட்டுச்சென்றது. 1972-க்குப்பின்னர் வரையில்இருந்து சுலோட்டர்ஐயுறவாதத்துடன்கேட்டிருந்தார் ''தொழிலாளவர்க்கம் ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்கும் சோசலிசத்தைக்கட்டுவதற்கும் தொழிலாள வர்க்கத்திற்கு தலைமை தாங்கக்கூடிய புரட்சிகரக கட்சிகளை நெருக்கடிகளின் விளைவுகளினுலான அரசியல் அபிவிருத்திகளின் காட்சிகளின் முன்னே – உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் டிராட்ஸ்கிச சக்திகளின், டிராட்ஸ்கிசத்தின் வேலைத்திட்டங்களை வெறுமனே கொண்டுவருவதால் மட்டுமே கட்டி எழுப்ப முடியுமா?''



சுலோட்டர்

அவரது பதில் அழுத்தமாக இல்லை என்பதாக இருந்தது. 1979-ல் பண்டாவினுல் எழுதப்பட்டு, பின்னர் அனைத்துலகக்குழுவின் பெயரால் கட்சி அறிக்கை விநியோகிக்கப்பட்டது. அதில் தொழிலாளர் புரட்சிக்கட்சி (WRP) வலியுறுத்தியதாவது, ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்திகளுக்கு பிரச்சார லேபிள்களை இட்டு அதன் காரணமாக அதனுடைய சாரத்தை உண்மையாக பிரித்தறிவதற்குத் தடையாகவும், மறைத்துக் கொண்டும் இல்லாதவாறு கட்சி ஊழியர்கள் கட்டாயம் பயிற்றுவிக்கப்படவேண்டும் ஆனல் பதிலாக அவர்கள் அபிவிருத்தி அடைந்துவரும் புரட்சிகர யதார்த்தம்கோருகின்ற ஒருபோராடும் உணர்வுமிக்க விழிப்புணர்வை அபிவிருத்தி செய்ய வேண்டும்.''

104 எல்லாவித அரசியல் போக்குக்களையும் இயக்கங்களையும் அவை பிரதிநிதித்துவம் செய்யும் சமூக சக்திகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் பாரம்பரிய மார்க்சிச விதிமுறையினையே தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP) யின் சந்தர்ப்பவாதிகள் ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியின் மேல் பிரச்சார லேபிள்களை ஒட்டுதல்'' என இழிவுபடுத்தினர். இந்த வழியினுல் மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான மூலோபாய தந்திரோபாய வழிமுறைகளை நிர்ணயம் செய்ய முடியும். மறுபுறத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உள்ளே ஹீலி வாத சந்தர்ப்பவாதப் பிரிவு, பாட்டாளி வர்க்கத்தினதும் சர்வதேச மார்க்சிச இயக்கத்தினதும் அத்தியாவசியமான வரலாற்று அனுபவங்களை கணக்கில் எடுக்காமல் ''வளர்ச்சியடையும்புரட்சிகர யதார்த்தம் வேண்டுவதுஎன்ன?'' என்பது தீர்மானித்துக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்றனர்.

105. 1985—86 பிளவு வரையிலான தசாப்தத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சித்தலைவர்களால் அமுல் செய்யப்பட்ட சகலவிதமான காட்டிக் கொடுப்புக்களுக்கும் இது அடிப்புடையாக விளங்கிற்று: நிரந்தரப்புரட்சிக்கோட்பாட்டினை நிராகரித்தல், மத்திய கிழக்கு, ஆப்பிரிக்க முதலாளித்துவ தேசியவாத ஆட்சியாளர்களுடனை கூட்டு, பிரிட்டனில் தொழிற்சங்க, தொழிற்கட்சி அதிகாரத்துவத்துக்கு அடிபணிவு; மற்றும் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை அழிப்பதற்கான விரைசைக்கிரமமான முயற்சிகள் ஆகியவற்றுக்காகும். ஒரு நீடிக்கப்பட்ட காலப் பகுதியில் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைவர்கள் இன்றைய சகாப்தத்தின் முக்கிய பண்பு 'தோல்வி காணுத தொழிலாள வர்க்கத்தின்' தோற்றமே எனப் பிரகடனம் செய்வதன் மூலம் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய அனுபவங்கள் பற்றிய எந்த ஒரு மார்க்சிச மதிப்பீட்டையும் தடைசெய்ய முயன்றனர். இந்த பிசுபிசுத்த சொற்றொடரோடு தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (W R P) சந்தர்ப்பவாதிகள், பாட்டாளி வர்க்க புரட்சித் தலைமைக்கான நெருக்கடியை குலைத்ததோடு, அதனிடத்தில் வர்க்கப் போராட்டம் பற்றிய முற்றிலும் அருவமான மற்றும் திருப்தியான ஒரு கருத்துருவை இருத்தினர். தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு நிகழ்வும் அவற்றின் பெறுபேறுகளைப் பொருட்படுத்தாமல் 'தோல்விகாணு தொழிலாள வர்க்கத்திற்கு' ஒரு உதாரணம் என தப்பட்டம் அடிக்கப்பட்டது; உண்மையில் இக்கோட்பாடு தொழிலாள வர்க்கத்திற்கு மார்க்சிச முன்னணிப்படை ஆற்ற வேண்டிய சுதந்திரமான பங்கைக் குறைக்கின்ற அதேவேளையில் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயக வாதிகள், முதலாளித்துவ தேசியவாத தீவிரவாதிகளின் குற்றங்களை நியாயப்படுத்தவும், மூடிமறைக்கவுமே சேவை செய்தது.

106. 1985—86 அனைத்துலகக்குழுவுக்கும் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிளவில் இருந்த ஓடுகாலிகளின் அனைத்து பிரிவுகளும் டிராட்ஸ்கிசத்திலிருந்து பூரணமாக துண்டித்துக் கொண்டனர் ஹீலி தம்மை மிகயீல் கோர்பச்சேவின் ஆதரவாளராகப் பிரகடனம் செய்ததோடு, அக்டோபர் புரட்சியின் 70—வது ஆண்டு நிறைவு 'கொண்டாட்டங்களில்' கலந்து கொள்ள அதிகாரததுவத்தினுல் மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டார். கிரீசில்சவாஸ் மைக்கேலின் தலைமையிலான அவரது சகாக்கள் கோர்பச்சேவை ஒட்டு மொத்தமாக புகழாரம் சூட்டுதலை உள்நாட்டில் ஸ்டாலினிஸ்டுகளின் மக்கள் முன்னணி அரசியலில் நேரடி பங்கு கொள்வதன் மூலம் இணைத்துக் கொண்டனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் ஆளுமையை நிராகரிப்பதற்கான ஒரு சாக்குப் போக்காக தொழிலாளர் புரட்சிக்கட்சியில் பிரசுரிக்கப்பட்ட அனைத்துலகக்குழுவிற்கு எதிரான ஒரு பகிரங்க கண்டனத்தினை எழுதியதன் பின்னர் பண்டா தொழிலாளர் புரட்சிக்கட்சியில் இருந்து பிரிந்தார். அவர் டிராட்ஸ்கியையும் டிராட்ஸ்கிசத்தையும் கண்டனம் செய்ததோடு, தம்மை ஜோசப் ஸ்டாலினின் ஒரு தீவிர ஆதரவாளனாகவும் பிரகடனம் செய்துகொண்டார். இன்று சுலோட்டரினுல் தலைமை தாங்கப்படும் தொழிலாளர் புரட்சிக்கட்யின்சி (WRP) மிச்ச சொச்சங்கள், உடனடியாக அனைத்து பப்லோவாதக் குழுக்களுக்குள்ளும் பழையதும் வர்க்க சகவாழ்வைக் கடைப்பிடித்தலில் மதிப்பிழந்தவர்களுமான பரிஜே வாதிகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிவகுத்தது.

107. 1985—86—ன் பிளவில் இருந்து இடம் பெற்று வரும் சம்பவங்கள் புரட்சிகர இயக்கத்தின் உள்ளே சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்திற்கும் வர்க்கப்போராட்டத்தின் வரலாற்று அபிவிருத்திக்கும் இடையேயான ஆழ்ந்தஉறவை மீண்டும் எடுத்துக்காட்டியது. பிளவானது நான்காம் அகிலத்தினுள் பிரதிபலித்த புறநிலை வர்க்க சக்திகளின் போராட்டத்தின் விளைவாக இருந்தது. 1938—ல் டிராட்ஸ்கியால் ஸ்தாபிக்கப்பட்ட நான்காம் அகிலம், நிகழ்வுகளின் அழுத்தங்களின் கீழ் 1953—அளவில் ஒரேசீரான தன்மையான அரசியல் இயக்கமாக இல்லாதிருந்தது. 1963—ல் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP)யின் சீரழிவுக்கு எதிராக (SLL) எஸ் எல் எல் ஆல் பாதுகாக்கப்பட்டது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு 1985—ஆண்டளவில் சமரசம் செய்ய முடியாத வர்க்கப்போக்குகளுக்கிடையில் துருவமுனைப்படுத்தப்பட்டிருந்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் கணிசமான பகுதியினர் குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் நீண்ட மரபுரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலேயே, பிரித்தானிய சந்தர்ப்பவாதிகளின் காட்டிக்கொடுப்புக்களை எதிர்க்கமுடிந்தது. பிளவானது தொழிலாளர் புரட்சிக் கட்சியை இருளடையச் செய்த அதேவேளை, அது அனைத்துலசக்குழுவை பெருமளவில் பலப்படுத்தியதோடு, மார்க்சிசக் கோட்பாட்டின் ஒருஉண்மையான மறுமலர்ச்சிக்கும் இட்டுச்சென்றுள்ளது.

108. தொழிலாளர் புரட்சிக்கட்சி ஒடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தினை அனைத்துலகக்குழு நடத்துகையில் நான்காம் அகிலத்துக்குப் பேராபத்து 'பிரச்சார வாதம்' அன்றி சந்தர்ப்பவாதமே என்ற அடிப்படை உண்மையை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. இங்கு முன்னைய பண்பானது, வேலைத்திட்டத்தை மிதமிஞ்சியவகையில் வெறுமனே காட்சிக்கு வைப்பதை நோக்கிய சரிவாகும். இப்பலவீனம் கல்வி, வெகுஜன இயக்கத்தின் உள்ளேயான அனுபவத்தின் ஊடாகக்களையப்பட முடியும். பின்னையதோ பலம் வாய்ந்த சமூக சக்திகளில் வேரூன்றிய அரசியல் போக்காகும். இது தொழிலாள வர்க்கத்தின் மீதும் மற்றும் புரட்சிகர முன்னணி மீதும் ஏகாதிபத்திய அழுத்தத்தினை பிரதிபலிக்கின்றது. பிரச்சார வாதத்தினை நோக்கிச்சரிந்து விட்ட தோழர்கள் பால் சலுகை காட்டாத போதிலும், கட்சி பொறுமைய்யை கடைப்பிடிக்கும் வேளையில் சந்தர்ப்பவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாடு சம்பந்தமாகவும் அது ஈவிரக்கமற்ற பகைமைப்போக்கினைக் கடைப்பிடிக்கிறது.

109. 1985—86 பிளவு நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று மைல்கல் என்பதில் எந்த ஒரு கேள்விக்கும் இடமில்லை. இது 1953—ல் அனைத்துலகக்குழு நிறுவப்பட்டதில் இருந்து பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக டிராட்ஸ்கிச இயக்கத்தினுல் தொடுக்கப்பட்ட நீண்ட போராட்டத்தின் உச்சக்கட்டமாகும். பப்லோவாத சந்தர்ப்பவாதத்தினுல் தோற்றுவிக்கப்பட்ட நீண்டகால ஐக்கியமின்மையும், தடுமாற்றமும் ஒரு முடிவுக்கு வந்துள்ளது. ''உலகம் முழுமையும் உள்ள அனைத்துவித உண்மையான டிராட்ஸ்கிஸ்டுகளையும்—அதாவது புரட்சிகர மார்க்சிஸ்டுகளை—அனைத்துலகக்குழுவின் பதாகையின் கீழ் கொண்டு வருவதற்கான நிலைமைகள் உருவாகி உள்ளன.

முதலாளித்துவ நெருக்கடியும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான தாக்குதலும்

110. ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், மற்றும் பப்லோவாத சந்தர்ப்பவாதம் ஆகியவற்றினது இணைந்த காட்டிக் கொடுப்புக்கள், பிரெட்டன் வூட்சின் சரிவினுல் தூண்டி விடப்பட்ட மிக மோசமான நெருக்கடி காலப்பகுதியில் நின்று பிடிப்பதற்கும் உலக முதலாளித்துவ சமபலநிலையை ஸ்தாபிப்பதற்கும அவசியமான அரசியல், பொருளாதார கொள்கைகளை தயார் செய்யவும் அனைத்துலக முதலாளித்துவ வர்க்கத்திற்கு நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தது. பெட்ரோ—டாலர்களின் மறுசுற்றோட்டம் என்ற தீர்க்கமான பொறிமுறையின் மூலம் கலைப்பு நெருக்கடி அச்சுறுத்தலில் இருந்து மீளமுடிந்தது. பொருளாதார பின்னடைவுக்கு முடிவுகட்டவும், உலக வர்த்தகத்தை விரிவுபடுத்தும் பொருட்டும் வங்கி கடன் கொடுப்புக்களை பிரமாண்டமாக அதிகரிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எவ்வாறெனினும் 1973—75 பொருளாதார பின்னடைவில் இருந்து தற்காலிகமாக விடுபட முடிந்த போதிலும் உலக முதலாளித்துவத்தின் மிக முக்கியமான புள்ளி விபரங்கள் பிரெட்டன—வூட்ஸ் சகாப்தத்தின் செழிப்பு நிலைமைகளுக்கு திரும்பவே இடமில்லை என்பதைச் சுட்டிக்காட்டின. 1970 களின் கடைசிப்பகுதிகளில் பணவீக்க அதிகரிப்பு வீதத்தையும், குறைந்த வளர்ச்சி வீதத்தையும் குறிக்கும் பொருட்டு 'ஸ்டாக்பிளேசன்' (STAGFLATION) என்ற பதம் புழக்கத்துக்கு வந்தது.

111. இலாபவீதம் சம்பந்தமான புள்ளி விபரங்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இவை 1970 கள் பூராகவும் தொடர்ந்து வீழ்ச்சி கண்டன. 1974—ன் பின்னர் ஐரோப்பா, அமெரிக்கா இரண்டிலும் லாபவீதம் கடுமையாக வீழ்ச்சிகண்டன. 1976-அளவில்முதலீட்டு மூலதனம் மீதான சராசரி லாபவீதம் 9.1% ஆகும். 1966—ல் இது 13.4% ஆக இருந்தது. அமெரிக்காவில் நிதியல்லாத கம்பெனிகளின் லாபவீதம் 1963—66ல் 15.5%-ல் இருந்து 1967—70-ல் 12.7% ஆகவும் 1971—74—ல் 10% ஆகவும் 1978—ல் 9.7% ஆகவும் வீழ்ச்சிகண்டது. 1965—ல் இலாபங்கள் தேசிய வருமானத்தின் 14% ஆக விளங்கின. 1970—அளவில் அவை 8.8% வீழ்ச்சி கண்டது. 1980—ல் புள்ளி 8.2% ஆகஇருந்தது. 1982—ல் 6.7% குறைவாக வீழ்ச்சியடைந்தது.

★11ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்.

112. இலாபவீதத்தின் வீழ்ச்சி, சுருள்பணவீக்கம், டாலர் மீதான அனைத்துலக நம்பிக்கையின் சரிவினை எதிர்கொண்ட அமெரிக்க முதலாளித்துவ வர்க்கம், 1970 களின் கடைசிப்பகுதியில் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத்தரங்களின்மேல் நேரடித் தாக்குதலை நடத்துவதை விட மாற்றுவழி இல்லை என்ற முடிவுக்கு வந்தது. 1979—ல் கார்ட்டர் நிர்வாகம் பாலவாக்கரை 'சமஷ்டி ரிசர்வ் வங்கியின் தலைவராக நியமனம் செய்தது. அவர் உடனடியாக பயங்கரமான சிக்கன கொள்கைகளை அமுல் செய்யத் தொடங்கினர். இரண்டாம் உலகப்போரின் பின்னர் இருந்து, தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக நீடித்த படுமோசமான தாக்குதலை நடத்தும் பொருட்டு, முதலாளித்துவத்தால் பயன்படுத்திக் கொள்ளப் பட்ட பொருளாதாரப் பின்னடைவின் ஒரு தூண்டும் தேவைக்காக வட்டி வீதங்கள் வரலாற்றின் மட்டங்களுக்கு உயர்த்தப்பட்டன. ஒருசில மாதங்களுக்குள் ஐரோப்பாவிற்கும் பொருளாதார பின்னடைவு பரவியது. 1983—ல் வேலையற்றோர் எண்ணிக்கை 1975—ல் இருந்ததைக் காட்டிலும் இரண்டு மடங்காகியது.

113 1980—நவம்பரில் ரேகன் தெரிவு செய்யப்பட்டமை அமெரிக்காவில் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான உக்கிரமான தாக்குதலை சமிக்ஞை காட்டியது. எதிர்ப்புக்காட்டமாட்டோம். என்ற வாக்குறுதியை ஏ. எப். எல்—சி ஐ ஓ. (AFL—C.I.O.) விடம் பெற்ற ரேகன் நிர்வாகம், கார்ட்டர் நிர்வாகத்தினுல் தயாரி செய்யப்பட்ட அவசரகால அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 1981, ஆகஸ்டில் 13,000 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களை ஒரேயடியாக வேலை நீக்கம் செய்தது. தொழிலாள வர்க்கத்தின் கடந்தகாலத் தேட்டங்களைக் கட்டிக்காப்பது பற்றிய எந்தவிதமான பாவனையையும்கூட அதிகாரத்துவம் கைவிட்டதால் தொழிற்சங்க இயக்கத்தினை அடியோடு துடைத்துக்கட்டுவது தொடர்ந்தது

114 தொழிலாள வர்க்க எதிர்ப்பின் ஒவ்வொரு வடிவத்தினையும் முறையாக நாசப்படுத்தும் பொருட்டு, ஏ. எப். எல்—சி ஐ. ஓ. தொழிற் சங்க இயக்கத்தினை துடைத்துக்கட்ட தலைமை தாங்கத் தொடங்கியது இது தொழில்துறை சார்ந்த ஒப்பந்தங்களை ஒழிப்பதை வரவேற்றது, இருந்து கொண்டிருக்கும் உடன்படிக்கைகளை இரத்துச் செய்ய இணங்கியது, கூலி வெட்டுக்கும், "திரும்பக்கொடு"; என்பது போன்ற கணக்கற்ற எண்ணிக்கையுடைய கோரிக்கைகளுக்கு அனுமதியளித்தது, மற்றும் பல எண்ணிக்கையில தொழிற்சாலைகள் மூடலுக்கு ஆர்வத்துடன் துணை போனது. தொழிற்சங்கத் தலைமை நடைமுறையில் அதனை கூட்டுத்தாபன நிர்வாகத்தின் ஒழுங்கமைப்புக்குள் ஒருங்கிணைத்துக் கொள்ளுதலை ஏற்றுக் கொண்டது. அதிகாரத்துவம் தனது வேலையை முற்றுமுழுதாக நிறைவேற்றுவதால, பெரிய கூட்டுத்தாபங்கள் ஆயிரக்கணக்கான நடுத்தர நிர்வாகிகளை வேலை நீக்கம் செய்து, அவர்களின் முன்னைய மேற்பார்வை வேலைகளை தொழிற்சங்க அதிகாரிகளிடம் ஒப்படைப்பதைசாத்தியமாக்கியது. பெரிய அமெரிக்க கூட்டுத்தாபனங்களால சமீபத்தில வெளியிடப்பட்ட உயர்ந்த லாபங்கள், தொழிலாளர் அதிகாரத்துவத்தினுல் சாத்தியமாக்கப்பட்ட பெருமளவில் அதிகரித்த சுரண்டல் மட்டத்தினைப் பிரதிபலிக்கின்றது. பெருமபாலான கம்பெனிகளில் நஷ்டத்திலிருந்து லாபத்துக்கு இடம்பெயர்வதில, விற்பனை அதிகரிப்பு அல்ல செலவில வெட்டுதலே ஒரு பெரும் காரணியாக விளங்குகிறது. 1980 -க்கும் முன்னரைவிட 24% குறைவான விற்பனையில் மோட்டார் கம்பெனிகள் தற்போது லாபம ஈட்டுகின்றன. 1970—ல் கூலிகளும் சம்பளங்களும் தேசியவருமானத்தில் 75.4% உள்ளடக்கியிருந்தன; 1986—ல் அந்தப்புள்ளிகள் 61% ஆக வீழ்ச்சியுற்றன.

115. 1979—80—ல் அமெரிக்க முதலாளித்துவத்தினுல் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள, அனைத்துலக மட்டத்தில் ஒருவர்க்க ஆட்சி விதிமுறையில ஒரு மாற்றத்தை சமிக்ஞை செய்தது. 1979—மே மாதத்தில் தாட்சர் தேர்ந்து எடுக்கப்பட்டமை, தொழிலாள வர்க்கத்தை கட்டுப்பாடுக்குள் கொண்டு வருவதை இலக்காகக்கொண்ட நீடித்தஉக்கிரமான ஒரு எதிர்த்தாக்குதலின் ஆரம்பத்தையும, இரண்டாம் உலகப்போரின் பின்னர் உருவாக்கப்பட்ட சமூக நல அமைப்புக்களை ஒழித்துக்கட்டுவதையும் ஏககாலத்தில குறித்து நின்றது. பிரான்சில் ஸ்டாலினிச அமைச்சர்கள் நால்வரைக் கொண்ட "சோசலிச" மிட்டரண்ட் அரசாங்கம், ஒரு பகட்டான தீவிரவாதத்தை காட்டிய பின்னர், ரேகனின் பொருளாதாரக் கொள்கைகளில் இருந்துபேதம் காண முடியாத கொள்கைக்குத்திரும்பியது ஹெல்மட்கோல் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜெர்மனியிலும் இத்தகைய ஓர் அபிவிருத்தி ஏற்பட்டது ரேகனிச "சீர்கேடுகளின்" ஐரோப்பிய சாரச்சுருக்கமானது வெறிபிடித்த "தனியார் மயமாக்கல்" பிரச்சாரம் தேசிய மயமாக்கப்பட்ட தொழிற்துறைகளை சிதறடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1979—1988-க்கு இடையே போர்ச்சுக்கல் முதல் கிரீஸ்வரையிலான ஐரோப்பிய அரசாங்கமும் சமூக சீர்திருத்த வாதம், வர்க்க சமரசக கொள்கைகளை நிராகரித்தன. இப்போக்கு அமெரிக்காவுடனும் ஐரோப்பாவுடனும் மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடவில்லை. ஆஸ்திரேலியாவில் கவுக்கின் கீழும, நியூசிலாந்தில் லாங்கேயின் கீழும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள், தடையற்ற முதலாளித்துவ சுரண்டல்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினுல் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தடைகளைக்கூட தகர்க்கின்றனர். சர்வதேச நாணய நிதியினதும், உலக வங்கியினதும் சாட்டையின் கீழ் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் கூட-பெப்ரஸ்கோர்டேராவின் எக்குவடோர் மற்றும் சீகாவின் ஜமைக்கா முதல் ஜெயவர்த்தனேயின் இலங்கை மற்றும் காந்தியின் இந்தியா வரை—ரேகன நிர்வாகத்தின் கொள்கைகளை பின்பற்றமுயற்சிக்கின்றன.

புதிய புரட்சிகர நெருக்கடிக்கான புறநிலை அடிப்படை.

116. அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தின் வெளிப்படையான நெருக்கடி, முதலாளித்துவ பிரச்சார வாதிகளால் முதலாளித்துவத்தின் புதிய பொற்காலம் எனப் பிரகடனப்படுத்துவதற்காக கைப்பற்றப்பட்டது. ஆனால் வறுமையின் பெரும் வளர்ச்சிக்கு இடையேயும் முதலாளித்துவ வர்க்கத்தினுல் முழு முதலாளித்துவ முறையினதும் உலக நெருக்கடியில் இருந்து விடுவித்துக் கொள்ள முற்றிலும் முடியாது போயிற்று உலக அளவில் முதலாளித்துவ வர்க்கம முகம் கொடுக்கும் நெருக்கடியானது வெறும் கற்பனை அல்ல, ஒரு வரலாற்று ஒழுங்குமுறையான பண்பைக் கொண்டுள்ளது.

117 1970-களின் இலாபவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பொதுவான பொருளாதார தேக்கநிலையும் நாடுகடந்த கூட்டுத்தாபனங்களின் செயலில் திடீர் வளர்ச்சிக்கு உந்துதலைக்கொடுத்தது. இதன் விளைவாக உலகச்சந்தை முன்னெருபோதும் இல்லாத விதத்தில் இணைக்கப்பட்டு உற்பத்தியும் சர்வதேசிய மயமாக்கப்பட்டது. அனைத்துத் தேசியப் பொருளாதாரங்களும் அமெரிக்கா உட்பட, உலகப்பொருளாதாரத்தின் முழுமையானதும் தீவிரமானதுமான மேலாதிக்கத்திற்கு ஆட்பட்டமை நவீன வாழ்வின் ஒரு அடிப்படை உண்மையாகும். ஒரு இணைந்த சுற்றுவழிகளின் கண்டுபிடிப்புடனும் பூரணத்துவத்துடனும் கூடிய விதத்தில் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் செய்தித் தொடர்பு சாதனங்களில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. அவை பதிலாக, பூகோளத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பு வழிமுறைகளை துரிதப்படுத்தியுள்ளன. ஆனல் இந்த பொருளாதார தொழில் நுட்ப அபிவிருத்திகள் முதலாளித்துவத்திற்கு புதிய வரலாற்று சாலைகளைத் திறப்பதற்கு மாறாக, உலகப் பொருளாதாரத்துக்கும் முதலாளித்துவ தேசிய அரசு அமைப்புமுறைக்கும் இடையேயும் சமூக உற்பத்திக்கும் தனிச்சொத்துடைமைக்கும் இடையேயும் அடிப்படையான முரண்பாடுகளை வரலாற்றில் முன்னெருபோதும் இல்லாத அளவிற்கு தீவிரமாக்கியுள்ளன.

118. பிரம்மாண்டமான நாடுகடந்த கூட்டுத்தாபனங்களின் மற்றும் உற்பத்தி பூகோள மயமாக்கப்பட்டதன் தோற்றமானது பிரிக்க முடியாதவாறு, புரட்சிகர தாக்கங்களைக் கொண்ட மற்றுமோர் காரணியுடன் இணைந்து கொண்டுள்ளன: அமெரிக்கா தனது உலகப்பொருளாதார மேலாதிக்கத்தினை சார்புரீதியிலும் முழுமையாகவும் இழந்தமை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக அந்தஸ்தில் ஏற்பட்ட இந்தவரலாற்று மாற்றம் அமெரிக்காவை உலகின் முக்கிய கடன் கொடுப்பாளர் என்ற நிலையில் இருந்து மாபெரும் கடனாளி என்ற நிலைக்கு மாற்றியதன் மூலம் வெளிப்பாடாயிற்று இது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சிக்கான காரணமாக அடிப்படையைக் கோடிட்டுக் காட்டுவதோடு. அமெரிக்காவில் புரட்சிகர வர்க்க மோதுதல்களுக்கான காலப் பகுதிக்கும் காட்டாயம் இட்டுச்செல்கின்றது.

119. அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ் மறு நிர்மாணம் செய்யப்பட்ட யுத்தத்துக்குப் பிந்திய உலக முதலாளித்துவத்தின் முழு பொருளாதார மற்றும் பூகோள அரசியல் கட்டமைப்பின் சீர் செய்ய முடியாத தகர்வானது, ஜப்பான் பலம்வாய்ந்த தொழிற்துறை சக்தியாகவும் பெரும் மூலதன ஏற்றுமதியாளராகவும் எழுச்சி கண்டதைக் காட்டியது. இது அமெரிக்க முதலாளித்துவத்தை பூகோளத்தின் ஒவ்வொரு மூலையிலும் சவால் செய்கின்றது. அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதல்தான் பெரிதும் வெடிக்கும தன்மையுடையதாய் இருந்தாலும், அது ஏகாதிபத்திய வாதிகளுக்கிடையே மோசமடைந்து செல்லும் குரோதத்தின் ஒரு வெளிப்பாடு மட்டும ஆகிவிடாது. ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கம் பொருளாதார சமூகத்தை (E C.) ஜப்பானிய, அமெரிக்க மூலதனம் இரண்டையும் சவால் செய்யவல்ல ஒரு வர்த்தக நிதிக்கூட்டாக மாற்றம் செய்யமுயன்று வருகையில், யுத்தத்தின் பிந்தைய "அட்லாண்டிக் கூட்டு" அடியோடு தகர்ந்து வருகிறது. 1992—களில் தனியொரு ஐரோப்பியச் சந்தையை நிறுவும் திட்டங்களின் முக்கியத்துவம் இதுவே ஆகும்.

120. மாபெரும் புரட்சிகர முக்கியத்துவமுடைய நான்காவது காரணி ஆசிய பசிபிக் கரைபோர பொருளாதாரங்களின் அசாதாரணமான துரித அபிவிருத்தியாகும். நிலைத்திருக்க வைக்க முடியாத ஏற்றுமதி சந்தைகளில் முற்றிலும் தங்கியுள்ள பொருளாதார நிலையைக்கொண்ட தேசிய முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் தள்ளப்பட்டு வரும் பரந்த தொழிலாள வர்க்கத்தினைத் தோற்றுவித்துள்ளது. தென்கொரிய தொழிலாள வர்க்க இயக்கம் இளையதாயினும பலம்வாய்ந்த தொழில் துறைப்பாட்டாளி வர்க்கம படைப்பிரிவுகளாக ஆசியா முழுமையும் உலகப்புரட்சி அரங்கினுள் நுழைவதைக் குறிக்கிறது. ஏகாதிபத்தியத்தின் மூலதன ஏற்றுமதியினுல தொழிலாள வர்க்கத்தின் புதியதும், சக்திவாய்ந்ததுமான படையணிகள் எழுச்சி கண்டிருப்பது ஆசியாவில் மட்டுமல்ல. இதே போக்குகள் ஆப்பிரிக்காவிலும, லத்தின் அமெரிக்காவிலும் (சிறப்பாக மெக்சிகோ) நன்கு முன்னேறியுள்ளன.

121. நம கவனத்தைக் கவர்ந்த ஐந்தாவது காரணி, பின் தங்கிய நாடுகளின் ஏழ்மையடைதலும் கையாலாகாத தேசிய முதலாளித்துவத்தின் கணக்கற்ற வளர்ச்சி மூலோபாயங்களின் சீர்குலைவுமேயாகும். லத்தின் அமெரிக்க நாடுகள், ஆப்பிரிக்கா மற்றும இந்தியத் துணைக்கண்டத்தின் நாடுகள் அவற்றின் தொழில்மற்றும் பொதுப்பொருளாதார வளர்ச்சியில ஒருபோதும் ஒத்தவையாக இல்லாதிருப்பினும் அவை அனைத்தும் சமூக வெடிமருந்து பீப்பாய்கள் ஆகும் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் கையாளான தேசிய முதலாளித்துவம் ஆகியவற்றின் கொள்கைகளால் உருவாக்கப்பட்ட துன்பங்கள் இழிவுகள் இவற்றிலிருந்து சோசலிசப் புரட்சி மூலமாக தவிர வேறுவழியாக தப்பமுடியாது.

122 இறுதியாக ஆறவது காரணி, நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு சோவியத் யூனியனில், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மற்றும் சீனு ஆகியவற்றில உள்ள ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களால, சந்தைப் பொருளாதார கொள்கைகளுக்குச் சென்றதன திருப்பத்திலிருந்து கட்டவிழ்த்து விடப்படுகின்ற புரட்சிகர பிரதிவிளைவுகளாகும். சீனுவில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும முதலாளித்துவ உறவுகளை ஸ்டாலினிச அதிகாரத்துவம ஊக்குவித்ததன் விளைவாக 35 ஆண்டுகளுக்கும் மேலாகக் காணுத வறுமையின் அம்சங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. பணவீக்கமும் வேலையிலலாத் திண்டாட்டமும் ஏற்கனவே அவற்றின்தாக்கத்தை உணரப்பண்ணிக் கொண்டிருக்கின்றன. போலந்தில அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் எடுத்துக்காட்டியவாறு, ஸ்டாலினிஸ்டுகள் ஆளும் நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் முதலாளித்துவத்தை மீண்டும அறிமுகம் செய்வதை அமைதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### ஐக்கிய அமெரிக்க அரசுகள், ஜப்பான், ஐரோப்பாவும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதங்களின் வளர்ச்சியும்

123 முதலாளித்துவம் ஒரு இரண்டாவது பொற்காலத்தில் நுழைந்து கொண்டிருப்பதாகத் தம்மைத்தாமே திருப்திப்படுத்திக் கொண்டுள்ள விரக்தியுற்ற குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளுடன் ஒப்பிடுகையில நன்கு தொலைநோக்குப் பார்வையுடைய முதலாளித்துவத்தின பிரதிநிதிகள் அமெரிக்க மேலாதிக்கத்தின் தகர்வு பொதுவாக பூகோளப் பொருளாதாரம என அழைக்கப்படும் நாடு கடந்த கம்பெனிகளின உற்பத்தியின பெருக்கம, வர்த்தகப் பகைமைகளின் உக்கிரம, தொழில் நுட்ப முன்னேற்றங்களின் தாக்கங்கள் ஆகியன தீர்வுகாணமுடியாத பெரும பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதை அறிவர், அத்தகைய பிரதிநிதிகளில ஒருவரான மாஜி அமெரிக்க கருவூல செயலாளர் டபிள்யு மைக்கேல புளுமென்தல் சமீபத்தில் எழுதியதாவது: "மிகப் பிரமாண்டமான அளவிலான ஒரு நிஜ உலக மூலதனச்சந்தையும மற்றும் பல இடைநிலைத் தொடர்புகளும் ஒளியின் வேகத்தைப் போல் விரைவில எல்லைகளைப் பொருட்படுத்தாமல் உலகின் கம்ப்யூட்டர்கள், தொலைத்தொடர்புகள வலைப்பின்னல்களின் ஊடாக, பரந்த அளவிலானவழக்கத்திற்கு மாறான நிதிரீதியான புதிய பண அணிகலன்களும், பணத்தையொத்த கருவிகளும, —உள்நாட்டுக் கொள்கை, நாணயமாற்று விதங்கள் தொடர்பான வெறும் தேசிய ரீதியான நடவடிக்கையை காலாவதியாக்கிவிட்டன தேசிய பண விநியோகம் என்ன கேள்விக்கு பதிலளிப்பது இனியும சுலபமான காரியம அல்ல: 'தேசிய ரீதியில் பண விநியோகத்தைக கட்டுப்படுத்துவது எப்படி என்பதைத் தீர்மானிப்பதும் அதைப் போன்றே கடினமானதாகும

படிப்பகம்

www.padippakam.com



## நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின்...

ஆட்டத்தின் நியதிகள் அடிப்படையில் மாற்றம் அடைந்துவிட்டன...... பொதுவாகச் சொன்னால் பொருளாதார விவகாரங்களின் பல்[illegible] களில்—குறைந்தபட்சம் உலகின் பெரிய நாடுகளில் சிலவற்றிலும் [illegible] யின் அனைத்திலும்.......—அந்த தொழில் நுட்பமே தேசிய இறைமைப்[illegible] அடிப்படைக் கருத்தினைத் துரிதமாக காலாவதியானதாக்கிக் [illegible] டுள்ளது. தொழில் நுட்பமானது, தனிப்பட்ட உண்மையான பொருளா தார இருப்பை சக்தி வாய்ந்த விதத்தில் இனியும் கொண்டிருக்க முடியாத தொகுப்பினைக் கொண்ட ஒரு உலகத்தை சிருஷ்டித்துள்ளது என்ற முடி வுக்கு வருவது தவிர்க்க முடியாதது. நாம் எதுவும் மாற்றமடைந்துவிட வில்லை என்ற விதத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருவோமாயின், கட்டாயமாக தேசிய கொள்கைகளைப் பிரயோகிப்பதில் நாம் காட்டும் விடாப்பிடியானது, விரக்தியடையச் செய்வதோடு, பெரும்பாலும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.'' (வெளி விவகாரங்கள், பகுதி 66, எண் 3, பக்கம் 585—95)

124. தொழில் நுட்ப முன்னேற்றங்கள், அவையே நெருக்கடிக்கான காரணி அல்ல. புளுமென்தல் அதற்கு உதவமுடியாது. ஆனால் அதனை அங்கீகரிக்கின்றார். மாறாக 70 ஆண்டுகளுக்கு முன்னர் டிராட்ஸ்கியினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு சரியானது என்பதை அவரின் விளக்கம் காட்டு கிறது: ''முதலாளித்துவம் அபிவிருத்தி செய்த முதலாளித்துவ உற்பத்தி சக்திகள் தேசிய அரசு எல்லைகளைக் கடந்து வளர்ச்சிகண்டுள்ளன. இன்றைய அரசியல் வடிவத்தில் தேசிய அரசானது இந்த உற்பத்தி சக்திகளைச் சுரண் டுமளவுக்கு மிகக்குறுகியதாக இருக்கிறது. ஆதலால் நமது பொருளாதார அமைப்பின் இயற்கைப்போக்கு, இந்த அரச எல்லைகளை உடைத்துச்செல்ல முயலுவதாக உள்ளது. பூகோளம் முழுவதும், நிலம், கடல், வெளிப் பரப்பு அதேபோல் உட்புறமும் ஒரு பொருளாதார வேலைத்தளமாகி விட்டன. இவற்றின் வெவ்வேறு பகுதிகளுள் பிரிக்க முடியாதவாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக அமைந்துள்ளன. ஆனால் இதனை நிறைவேற்றுகையில் முதலாளித்துவ அரசுகள் ஒவ்வொரு நாட்டினதும் முதலாளித்துவ வர்க்கத்தின் லாபநலன்களின்பேரில் உலகம் தழுவியபொரு ளாதார முறையை கீழ்ப்படுத்துவதற்கான போராட்டத்திற்கு இட்டுச் செல்லப்படுகின்றன. 1789-1815, 1848-1859, 1864-1866, 1870களில் புரட்சிகள். யுத்தங்கள் மூலம் உருவாக்கப்பட்ட பழைய தேசிய அரசுகள் தங்களாலேயே உயிர்வாழ முடியாமற் போய்விட்டதை ஏகாதிபத்திய அரசியல் வேறெதனையும்விட நன்கு எடுத்துக்காட்டியுள்ளது. இன்று இது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சகிக்க முடியாத இடைஞ்சலாகி உள்ளது.'' (யுத்தமும் அனைத்துலகமும்)

125. உலகப் பொருளாதாரத்தின் அமைதியான அபிவிருத்தியை முதலாளித்துவத்தின் கீழும் அதன் தேசிய அரச முறையின்கீழும் காண்பது முடியாத காரியம். ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மோதல்கள், உலகைக் கூட்டாகச் சுரண்டும் முதலாளித்துவ உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு நிரந்தரமாகவே இரண்டாம் பட்சமாகப் போய்விட்டது என்ற' அதீத ஏகாதிபத்திய'' கருத்துரு, படுமோசமான திரிபுவாதி கார்ல் காவுத்ஸ்கியால், பல தசாப்தங்களுக்கு முன் முன்வைக்கப்பட்டது. ஏகாதி பத்தியங்களுக்கு இடையிலான குரோதம் என்ற கருத்தை ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சோவியத் அணிக்கும இடையிலான மோதல் என்பதாய்முழு மையாக வெளித்தள்ளப்பட்டு விட்டது என்ற கருத்து முதலில் பப்லோ வால் முன்வைக்கப்பட்டது, பின்னர் பண்டாவினாலும் சுலோட்டரினாலும் வளர்க்கப்பட்டது. இது பிரட்டன்—வூட்ஸ் அமைப்பின் கட்டமைப்பினுள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்காலிக மேலாதிக்கத்துக்கு குட்டி முதலா ளித்துவ அடிபணிவேயன்றி வேறல்ல.

126. உலகப் பொருளாதாரத்தக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையிலான முரண்பாட்டினை ஏகாதிபத்தியம் வெற்றிகரமாகத் தீர்த்து விட்டது என்ற கூற்றை முழுமனதாய் ஏற்றுக்கொண்ட கருத்துருவானது, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இருந்து ஏகாதிபத்தியங்களுக் கிடையிலான மிகவும் உக்கிரமான குரோதங்களின் மறுக்க முடியாத வளர்ச்சியால் தகர்க்கப்பட்டுவிட்டது.

127. உலகச் சந்தையில் அமெரிக்கா மேலாதிக்கம் இழந்ததைக் காட்டும் வகையில் எண்ணற்ற புள்ளி விபரங்களைக் காட்டமுடியும். 1960—1976 வரை அமெரிக்க வர்த்தக நிலுவை 690 கோடி டாலர் உபரிக் கும் 900 கோடி டாலர் பற்றுக்குறைக்கும் இடையே ஊசலாடிக் கொண் டிருந்தது; 1977-ல் இருந்து 1981 வரை 2500 கோடி டாலருக்கும் 3,400 கோடி டாலருக்கும் இடைப்பட்ட உறுதியான வர்த்தகப் பற்றுக்குறை காணப்பட்டது. 1982-ல் வர்த்தகப் பற்றுக்குறை 3,600 கோடி டாலராக இருந்தது, 1985-ல் அது 12,500 கோடி டாலராக எட்டியது. 1970 கள் வரை அமெரிக்கா மூலப் பொருட்களையும், பெட்ரோலையும் இறக்குமதி செய்தது.உற்பத்திப் பொருட்களையும், மூலதனப்பொருட்களையும்ஏற்றுமதி செய்தது. இன்று நிலைமை தலைகீழாகியுள்ளது. 1985-ல் ஜப்பானுக்கான அமெரிக்க ஏற்றுமதிகளில் ஐந்து முக்கிய ஏற்றுமதிகள்—மஞ்சள் தானியங் கள், சோயாபீன்ஸ், நிலக்கரி, கோதுமை, பருத்தி—அதே சமயம் ஜப்பானி லிருந்து மோட்டார் வாகனங்கள், அலுவலக எந்திரங்கள், எலெக்ட்ரானிக் உற்பத்தி நுகர் பொருட்கள், செமிகண்டக்டர்கள் ஆகியவற்றை இறக்கு மதிசெய்தது. 1965-ல் 65% ஆக இருந்த அமெரிக்க வாகன உற்பத்தியின் பங்கு 1980-ல் 20% ஆக வீழ்ச்சி கண்டது. 1980—1984-க்கும் இடையில் அமெரிக்கா தனது ஏற்றுமதிச் சந்தைப் பங்கில் 23%ஐ இழந்தது. இரும்பு எஃகுத் தொழிற்துறையின் நிலைப்பாடு, ஒரு காலத்தில் சவால் செய்ய முடி யாத முன்னணி தொழில் சக்தியாக திகழ்ந்த அமெரிக்கா இன்று அதை இழந்துவிட்டதை நன்கு காட்டுகிறது. 1955-ல் உலக எஃகு உற்பத்தியில் 39.3%ஐ அமெரிக்கா உற்பத்தி செய்தது. 1975-ல் அது 16.4% ஆக வீழ்ச்சி யடைந்தது. 1984-ல் அது 8.4% ஆக மட்டுமே இருந்தது, 1973—1983-க் கும் இடையே அமெரிக்க எஃகு உற்பத்தி 44% ஆக வீழ்ச்சி அடைந்தது. 1950 களில் ஒருங்கிணைக்கப்பட்ட அமெரிக்க கம்பெனிகள், அமெரிக்க சந்தைக்கு 95%க்கும் மேலானதை வழங்கின. இப்பொழுதோ அவற்றின் பங்கு 60%க்கும் குறைவானதாகும்.

128. ஜப்பான் ஒரு தொழில் துறை, மற்றும் நிதித்துறை சக்தியாக வளர்ச்சி கண்டதைக் காட்ட, இதற்குக் குறைவுபடாத பரந்த அளவிலான புள்ளி விபரங்கள் உள்ளன. அவற்றை அமெரிக்காவின் வீழ்ச்சி விபரங் களுடன் ஒப்பிடுகையில், அவை வியப்பூட்டுபவையாக இருக்கின்றன. கடந்த கால் நூற்றாண்டின்போது, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வர்த்தகத்தில் ஒரு தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டது. ஆனால் ஜப்பானிய இறக்குமதிகள் அமெரிக்க ஏற்றுமதிகளைவிட பெருமள வில் அதிகரித்துக் காணப்பட்டன. 1960-ல் அமெரிக்கா ஜப்பானுக்கு 140 கோடி டாலருக்கு பொருட்களை விற்பனை செய்தது. 110 கோடி டாலருக்கு பொருட்களை கொள்வனவு செய்தது. 1985-ல் அமெரிக்கா 2,360 கோடி டாலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது, [illegible] கோடி டாலர் பொருட்களை இறக்குமதி செய்தது. பணவீக்கத்தினைச் சரி செய்யும்பொழுது. இது ஏற்றுமதியில் 5 மடங்கு அதிகரிப்பினையும இறக்கு மதியில் 18 மடங்கு அதிகரிப்பையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. 1960-ல் ஜப்பானின் தலாவருமானம அமெரிக்க மட்டத்தில் சுமார் 30%-ல் [illegible] கொண்டிருந்தது. 1986-ல் இது சுமார் 70%க்கு வளர்ச்சி கண்டது 1960—1980-க்கு இடையே உலக மொத்த தேசிய உற்பத்தியில் (GNP) ஜப்பானின் மொத்தப்பங்கு 300% க்கும் மேலாக அதிகரித்தது.

129. உலக நிதித்துறையில் ஜப்பானின் பாத்திரம் கடந்த 20 வருடங் களாக எந்த விதத்திலும் குறைவுபடாத பெரும் வளர்ச்சிகண்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய வெளிநாட்டுக் கடனை 26,400 கோடி டாலர் களுடன் ஒப்பிடுகையில், ஜப்பானின் தேசிய வெளிநாட்டுச் சொத்து இப் பொழுது 30,000 கோடி டாலர்களை எட்டியுள்ளது. உலகின் மிகப்பெரிய எட்டு வங்கிகளில் ஏழு வங்கிகள் ஜப்பானுடையதாகும். உலகின் முன் னணி நூறு வங்கிகளில் 25 வங்கிகள் ஜப்பானுடையதாகும் முன்னணி 500 வங்கிகளில் 98 ஜப்பானுடையதாகும். அவை உலக வங்கிக் கடன் களில் 25% கணக்கைக் குறிப்பிடுகின்றன. ஒப்பிடுமிடத்து அமெரிக்க வங்கி கள் அனைத்தும் சர்வதேச வங்கி கடன் சொத்துகளில் 18%ஐ மட்டுமே கொண்டுள்ளன. லண்டன் நகரில் இயங்கும் 25 பெரும் வங்கிகளில் 12 வங்கிகள் ஜப்பானுடையதாகும். 1986-ல் டோக்கியோ பங்குச் சந்தை உலகின் பெரும் சந்தை ஆகியது. இது உலக பங்கு மதிப்பில் 1/3 பங்கை கணக்கில் கொண்டிருக்கின்றது. நியூயார்க் பங்குச் சந்தையின் அளவு சேர்க்கப்படாவிடில், உலகின் ஏனைய பங்குச் சந்தைகளை இணைத்தாலும் அதை விடப் பெரியது டோக்கியோவே. நொமுரா செக்யூரிட்டிஸ் கம்பெனியின் சந்தை மூலதனம் 5,400 கோடி டாலர்களாகும். இது தனது பெரிய அமெரிக்கப் போட்டியாளரான மெரில் லிஞ்ச் அண்ட் கம் பெனியை விட 10 மடங்கு அதிகமானது. இந்தப் புள்ளி விபரங்கள் 1987-அக்டோபர் வால்ஸ்ட்ரீட் சரிவுக்கு முன்னைய நிலைமைகளை பிரதிபலிக் கின்றன. அதிலிருந்து டோக்கியோ பங்குவிலைகள் முற்றிலும் மீண்டு விட்டன. ஆனால் வால்ஸ்ட்ரீட் கடந்த ஆண்டு மட்டத்துக்கு பெரிதும் கீழேயே நின்று கொண்டிருக்கிறது. வால்ஸ்ட்ரீட் நெருக்கடி சம்பந்தமாக ஒரு முக்கிய முதலாளித்துவப் பத்திரிகையான 'பாரின் பாலிசியில்' ஓர் உணர்வு பூர்வமான ஆய்வு வெளியாகியது. அது ஆளும் வர்க்கத்தின் முக்கிய பகுதியினரின் சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது. ஒரு பொருளா தார அறிஞர் தெள்வாகக் குறிப்பிடுகையில் '1987 சரிவு பொருளாதார நிதி பலத்தை அமெரிக்காவிடமிருந்து ஜப்பானுக்கு மாற்றுவதில் ஒருகுறிப் பிடத்தக்க படியைக் குறித்துள்ளது'' என்றார். (1988-ஏப்ரில், எண் 70 பக்கம் 71)

★அடுத்த இதழில் தொடரும்


## சோசலிசத் தொழிலாளர் கழகம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்டது

நான்காம் அகிலத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு சொற்பொழிவுத் தொடர்

பிப்ரவரி 12, ஞாயிறு மாலை 4-30 மணிக்கு:
கோர்பச்சேவின் முதலாளித்துவ மறு சீரமைப்பு (பெரஸ்து ரொய்கா); கொள்கையைத் தோற்கடி!

பிப்ரவரி 19, ஞாயிறு மாலை 4-30 மணிக்கு:
உலக முதலாளித்துவ நெருக்கடியும் சோசலிசத்திற்கான போராட்டமும்!

பிப்ரவரி 26, ஞாயிறு மாலை 4-30 மணிக்கு:
ஸ்டாலினிசமும் டிராட்ஸ்கிசமும்!

இடம்: கலைவாணி நர்சரிப் பள்ளி,
படைவீட்டம்மன் கோயில் தெரு,
(ஓட்டேரி பட்டேல் பூங்கா அருகில்)
குயப்பேட்டை, சென்னை-12.

பேருந்துகள்: 7B, 7D, 29A; 29B, 29C, 29J, 38C, 48A, 48, 48V (ஓட்டேரி ஸ்டாப்பிங்)

நான்காம் அகிலத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவுவிழா

நாள்: மார்ச் 18, சனி—காலை 10—12-00 வரை புகைப்படக் கண்காட்சி; கூட்டம் மாலை 5-00 மணிக்கு

இடம்: சாந்தா கல்யாண மண்டபம், கந்தசாமி கோயில் தெரு. குயப்பேட்டை, சென்னை-12 (தாசமக்கான் ஸ்டாப்பிங்)


**ஸ்டாலினிச சி. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான அவற்றின் உறவுகளைத் துண்டித்து, தொழிலாளர்கள். வசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக இ. பா. வெண்மணி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு சுப்பிரியர் கமர்ஷியல் எண்டர்பிரைசஸ் அச்சகத்தில் க. திருநாவுக்கரசு அவர்களால் அச்சிடப்பட்டது.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்